1389

1387

# ஸன்மார்க்கப்ரதர்சினீ

Vol. 2. FEBRUARY, 1935 No. 6.











மாதப் பதிப்பு.

பத்ரிகாசிரியர்: சாஸ்த்ர ரத்னம் தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்த்ரியள்.

மதுரை. (S. I.)

தனிப்ரதி விலை அணா 2. Copy Right

# ஸ்ரீமத் பகவத்கீதை.

முன் ஸஞ்சிகையின் தொடர்ச்சி.

---

ய ஏநம் வேத்தி ஹந்தாரம்
யஶ்சைநம் மந்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜாநீத:
நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥

ந ஜாயதே ம்ரியதே வா கதாசி
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ।

ய: (ய:) = எவனொருவன்
ஏநம் (ஏநம்) = இந்த ஆத்மாவை
ஹந்தாரம் (ஹந்தாரம்) = ஹனனம் என்ற க்ரியைக்கு கர்த்தாவாக
வேத்தி (வேத்தி) = அறியானோ
ய: (ய:) = எவனொருவன்
ஏநம் (ஏநம்), = இந்த ஆத்மாவை
ஹதஞ்ச (ஹதஞ்ச) = ஹனனக்ரியைக்கு கர்மாவாகவும்
வேத்தி (வெத்தி) = அறியானோ
தௌ (தௌ) = அந்த

உஹௌ (உபௌ) = இருவர்களும்

நவிஜாநீதஃ (நவிஜாநீத:) = அறியாதவர்கள்

அயம் (அயம்) = இந்த ஆத்மாவானவன்

நஹந்தி (நஹந்தி) = கொல்லுகிறவனல்ல

நஹந்யதே (நஹந்யதே) = கொல்லப்படுகிறவனுமல்ல

யதஃ (யத:) = யாதொரு காரணத்தால்

அயம் (அயம்) = இந்த ஆத்மாவானவன்

அபூத்வா (அபூத்வா) = முன்காலத்தில் இல்லாமலிருந்து

பூயஃ (பூய:) = மறுபடியும்

பவிதா (பவிதா) = பிறந்தவனாக

ந (ந) = இல்லையோ

பூத்வாவா (பூத்வாவா) = வர்த்தமான காலத்தில் இருந்தாவது

பூயஃ (பூய:) = வருங்காலத்தில்

ந பவிதாவா (ந பவிதாவா) = இல்லாதவனாக ஆகப்போரான் என்றோ

ந (ந) = இல்லையோ

ததஃ (தத:) = அக்காரணத்தால்

நஜாயதே (நஜாயதே) = பிறக்கிறதில்லை

ந ம்ரியதே (ந ம்ரியதே) = சாகரதில்லை

யதஃ (யத:) = யாதொரு காரணத்தால்

நஜாயதே (நஜாயதே) = பிறக்கிறதில்லையோ

ததஃ (தத:) = அக்காரணத்தால்

அஜஃ (அஜ:) = பிறப்போடு கூடின ஜாதியில் சேர்ந்தவனல்ல

| | | |
|---|---|---|
| 𑌯𑌤𑌃 𑌨 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 (யத: ந ம்ரியதே) | = | யாதொரு காரணத்தால் சாகிற தில்லையோ |
| 𑌤𑌤𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 (தத: நித்ய:) | = | அக்காரணத்தால் மரிக்கும் ஜாதியில் சேர்ந்தவனல்ல |
| 𑌅𑌯𑌂 (அயம்) | = | இந்த ஆத்மாவானவன் |
| 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌃 (சாச்வத:) | = | எப்பொழுதும் இருக்கிறவன் |
| 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃 (புராண:) | = | அனாதி காலஸித்தமான புருஷன் |
| 𑌶𑌰𑍀𑌰𑍇 (சரீரே) | = | சரீரமானது |
| 𑌹𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 (ஹந்யமானே) | = | அழியும்பொழுதும் |
| 𑌨𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 (நஹந்யதே) | = | அழிகிறதில்லை. |

[புதிதாக மாற்றப்பட்ட ப்ரஸ்ஸில் நாகரலிபி இன்னும் வந்து சேராததால் க்ரந்தாக்ஷரத்தில் ச்லோகம் எழுதியிருப்பதை வாசகர்கள் மன்னிக்குமாறு கோரப்படுகிறது. நாகரலிபியில் ச்லோகத்தைப் படித்துத் தத்வத்தைத் தெரிந்துகொண்ட வாசகர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்துத் தமிழிலேயே ச்லோகமும், பதவாரியான அர்த்தமும் விசிதமாக எழுதப்பட்டிருக்கிறது.]

யஏனம் வேத்தி ஹந்தாரம் யச்சைனம் மன்யதேஹதம் ।
உபௌதௌ நவிஜாநீத: நாயம்ஹந்தி நஹன்யதே ॥

ந ஜாயதே ம்ரியதேவா கதாசித்
நாயம் பூத்வா பவிதாவா நபூய: ।
அஜோநித்ய: சாச்வதோயம் புராண:
நஹந்யதே ஹன்யமானே சரீரே. ॥

இந்த இரண்டு ச்லோகமும் கடவல்லி உபநிஷத்திலுள்ள மந்த்ரங்களாகவே ஆகும். இதனால் தர்மராஜாவுக்கும் நசிகேதஸ் என்ற

ப்ராம்மண குமாரனுக்கும் நடந்த ஸம்வாதமானது அறிவிக்கப்படு கிறது. அதாவது வாஜச்ரவஸ் என்ற பெயருடன் பூலோகத்தில் ஒரு மஹர்ஷியானவர் ரொம்பவும்பிரஸித்தமாக விளங்கிவந்தார். அவருக்கு நசிகேதஸ் என்று ஒரு குமாரனுமிருந்துவந்தான். அந்த குமார னுக்கு ஸுமார் ஏழு எட்டு வயதிருக்கலாம். அந்த ஸந்தர்ப்பத்தில் அந்த மஹர்ஷியானவர் "விச்வஜித்" என்ற ஒரு பெரிய யாகத்தை ஆரம்பித்து நடத்தினர். அந்த யாகத்திலோ அத்வர்யு முதலான ரித்விக்குகளுக்கு தன்னிடத்திலுள்ள ஸகலமான ஸொத்தையும் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. அவ்விதமே அந்த மஹர்ஷியும் ஸகல ஸொத்துக்களையும் ரித்விக்கு களுக்கு தக்ஷிணையாகக் கொடுத்தார். மஹர்ஷிகளிடம் கோக்கள் தானே ஸொத்தாக இருக்கக்கூடும். ஆகையால் அதையே தக்ஷிணை யாகக் கொடுத்தார். ஆனல் அந்த மஹர்ஷி அந்த கோக்களை தக்ஷிணை யாகக் கொடுக்கும் காலத்தில் பால்களை கறந்துகொண்டு தானம் செய் தார். அதிலும் அந்த கோக்கள் மறுபடியும் கன்று போடும்படியான சக்தியில்லாத கிழத்தன்மை யடைந்த கோக்களாக இருந்தன. இவ் விதமான கோக்களை வாஜச்ரவஸ் என்ற மஹர்ஷி ரித்விக்குகளுக்கு தக்ஷிணையாகக் கொடுக்கும்பொழுது இளம்பருவத்திலுள்ள நசிகேதஸ் என்ற அந்த ரிஷியினுடைய குமாரனுக்கு பிதாவினுடைய க்ஷேமத் தைக் குறித்து ஒரு நல்ல எண்ணம் ஏற்பட்டது.

அதாவது "ஐயோ! கஷ்டம்! நமது தகப்பனர் மகாவித்வானுக இருந்தும் மேலான யாகத்தை அநுஷ்டித்தும் ரித்விக்குகளுக்கு தக்ஷிணை கொடுக்கும்பொழுது லோபத்தை யடைந்துவிட்டாரே. இனி கன்று போட்டு வம்சவிருத்தியை செய்ய சக்தியில்லாத கிழத் தன்மையை அடைந்த கோக்களையா, ரித்விக்குகளுக்குத் தக்ஷிணையாகக்

கொடுக்கிறது, இவர் செய்த க்ரது எப்படி புஷ்கலமாக ஆகும்? இந்த க்ரதுவானது நமது பிதாவுக்கு புஷ்கலபலத்தைக் கொடுக்க வேண்டுமானல் கோதானத்தில் ஏற்பட்ட தோஷத்தை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டியதவச்யமாகும்.

தகப்பனுருக்கோ, ஆசார்யனுக்கோ ஏற்படும் துக்கத்தை நிவர்த்தி செய்து வைப்பதே பிள்ளைக்கோ சிஷ்யனுக்கோ கடமையாக ஆகும். ஆகையால் ப்ரியபுத்ரனை நம்மையே நமது தகப்பனுரான இந்த மஹர்ஷியானவர் யாருக்காவது தானம் செய்துவிட்டால்தான் இவருக்குக் கோதானத்தில் ஏற்பட்ட லோபமானது நசித்துவிட்டு இவர் செய்த யாகமானது ஸம்பூர்ண பலத்தைக் கொடுக்கக்கூடியதாக ஆகும்" என்று எண்ணி பிதாவினுடைய ஸமீபம் சென்று, "அப்பா என்னை யாருக்குக் கொடுத்தீர்கள்? இல்லாவிட்டால் தங்கள் யாகம் எப்படி ஸம்பூர்ணமாக ஆகும்?" என்று சொன்னுன்.

ஒருதடவை சொன்னதற்கு தகப்பனுரான வாஜச்ரவஸ் என்ற மஹர்ஷியானவர் ஏதோ குழந்தை பேற்றுகிருன் என்று பேசாமலிருந்துவிட்டார். ஆகிலும் நசிகேதஸ் என்ற பையனே விடுகிறதில்லை. இரண்டாம் தடவையும் மூன்றும் தடவையும் முன்போலவே பிதாவினிடம் சென்று சொன்னுன். வாஜச்ரவஸ் என்றமஹர்ஷிக்கோ கோபம் மேலிட்டு, "ம்ருத்யுவுக்கு உன்னைக் கொடுத்தேன்" என்று சொல்லிவிட்டார்.

அதைக்கேட்ட நசிகேதஸ் என்ற பையனுக்கோ மனேவருத்தம் மேலிட்டது. "ஐயோ! நமது தகப்பனுருக்கு நன்மையை நாம் எண்ணப்போக நம்மை ம்ருத்யு லோகத்திற்கு அனுப்பிவிட்டாரே. உத்தமமான புத்ரர்களோ, சிஷ்யர்களோ, அவர்களுக்குள் புத்ர

னுகவோ சிஷ்யனுகவோதான் நான் நடந்துகொண்டு வருகிறேன். அப்படியில்லாமற்போனுலும், மத்யமமான புத்ரர்களோ சிஷ்யர்களோ அவர்களுக்குள் ஒரு புத்ரனுகவோ சிஷ்யனுகவோ தான் நான் நடந்து கொண்டு வருகிறேன். அதமமான புத்ரர்களின் கோடியிலேயோ, சிஷ்யர்களின் கோடியிலேயோ என்னை ஒருகாலத்திலும் சேர்க்க முடியாது. என்றும் நான் உத்தமனுகவோ அல்லது மத்யமனுகவோ தான் ஆகுவேன், அதமனல்ல. அவ்விதமிருக்கும்பொழுது என்னை ம்ருத்யுவினுடைய லோகத்திற்கு பிதாவான மஹர்ஷி அனுப்பிவிட்டாரே'' என்று வருத்தப்பட்டுக்கொண்டு "யமலோகம் போய்தான் நான் என்ன செய்யப்போகிறேன். என்னுல் ஆகவேண்டியது யமனுக்கு என்ன இருக்கிறது. ஆகிலும் ப்ரயோஜனம் ஒன்றுமில்லாமல் வீணுக கோபத்தால் நம்மை ரிஷியானவர் சொன்னுர்.

ஆகிலும் பித்ருவாக்யமானது வீணுக போகக்கூடாது'' என்று தீர்மானித்துவிட்டு மறுபடியும் பிதாவின் ஸமீபம் சென்று அழுது கொண்டு, "அப்பா! நான் என்ன சொல்லிவிட்டேன். எதற்காக தங்களுக்கு இவ்வளவு கோபம் வரவேண்டும். இப்பொழுது தாங்களும் தவறுதலான வார்த்தை சொல்லிவிட்டோமே என்று துக்கப் படுகிறீர்களே. ஆகிலும் இனி அதை மாற்றிக்கொள்வது ந்யாயமில்லை. தர்மங்களுக்குள் ஸத்யமே சிறந்ததர்மமாகும். சென்ற மஹர்ஷிகளோ தற்காலத்திலிருக்கும் மஹர்ஷிகளோ, எல்லாரும் ஸத்யத்தையே சரணமடைகிறவர்கள் அதை தாங்களும் ஆலோசிக்க வேண்டும். பொய் சொல்லி ஜீவிப்பதில் ப்ரயோஜனம் ஒன்றுமில்லை. பயிர்களைப் போல் மனிதன் காலக்ரமமாக அழிந்துவிடுகிறுன். மறுபடியும் பிறக்கிறுன். இவ்விதமிருக்கும் ஸம்ஸார சக்ரத்தில் பொய் சொல்லுவதால் என்ன ப்ரயோஜனமிருக்கிறது. ஆகையால் ஸத்யத்தை

தாங்கள் பரிபாலனம் பண்ணவேண்டும். என்னை யமலோகத்திற்கு அனுப்பிவிடுங்கள்" என்று சொன்னான்.

வாஜச்ரவஸ் என்ற மஹர்ஷி புத்ரன் கூட பெரிதல்ல ஸத்யம் என்ற தர்மம் பெரிதென்று நினைத்துப் புத்ரனைப்பார்த்து "உன்னை நான் ம்ருத்யுவுக்குக் கொடுத்துவிட்டேன்" என்று தான் சொன்ன வார்த்தையை ஸத்யமாக பரிபாலனம் பண்ணுவதற்காக நசிகேதஸ் என்ற புத்ரனை யமலோகத்திற்கு அனுப்பிவிட்டார். நசிகேதஸ்ஸும் பிதாவின் வாக்யத்தை சிரஸ்ஸால் வகித்துக்கொண்டு யமலோகம் போய்ச்சேர்ந்து, அந்த ஸமயத்தில் யமதர்மராஜாவானவன் வெளி தேசங்களுக்கு போயிருந்த காரணத்தால் மூன்றுநாள்வரையிலும் யம லோகத்தில் நசிகேதஸ் காத்துக்கொண்டிருந்தார். பிறகு நான்காவது தினம் காலையில் தர்மராஜா வந்துவிட்டார். அந்த மூன்று நாள் யமலோகத்தில் நசிகேதஸ் வசிக்கும்பொழுது யாதொரு விதமான ஆதாரவுமில்லாமல் சாப்பாடும் தீர்த்தமுமில்லாமல் உபவாஸமாக இருந்து வந்தார். யமன் வந்தவுடன் மந்த்ரிகளும் அவனுடைய பார் யையும் இந்த வ்ருத்தாந்தத்தை சொன்னார்கள். "ஹே ராஜன்! யாரோ ஒரு ப்ராமண குமாரன் தங்களுடைய பேட்டிக்காக மூன்று நாளாக காத்துகொண்டிருக்கிறான். அக்னிதானே என்றுசொல்லக் கூடிய தேஜஸ்ஸோடு விளங்கிவருகிறான். இதுபோலொத்த அதிதியை ஸத்கரித்து ஸந்தோஷப்படுத்தாத போனால் க்ரஹமே எரிந்துபோய் விடும், அத்துடன் பூஜிக்கப்படாமல் திரும்பிப்போகும் அதிதியான வன் செய்த ஸகலமான புண்ய கர்மாக்களுடைய பலத்தையும் அப கரித்துக்கொண்டு போய்விடுகிறான். அதற்காகத்தான் மஹான்கள் அதிதி வந்தவுடன் அக்கினியினுடைய தாகத்தை சமனம்பண்ணுவது போல், அதிதிக்கு அர்க்ய பாத்ய ஆசமனீயாதிகளால் ஸத்காரம்

செய்து அதிதியினுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்து வைக்கிறார்கள்.

ஆகையால், ராஜனே தாங்களும் இந்த நசிகேதஸ் என்ற அதிதிக்கு ஸத்காரம் செய்யுங்கள். அர்க்யபாத்யாதிகளுக்காக தீர்த்த பாத்திரத்தையும் எடுத்துக்கொள்ளலாம். உதாஸீனமாயிருந்தால் நம்முடைய ஸகல ஸம்பத்தும் நசித்துவிடும். எதிர்பார்க்காமல் வருகிற க்ஷேமமோ, எதிர்பார்த்து முயற்சியினால் கிடைக்கும் க்ஷேமமோ, ஸத்ஸங்கத்தால் ஏற்படும் புண்யமோ, ஸத்யமாயும், ப்ரியமாயும் பேசுகிற ஸம்பாஷணத்தின்பலமோ, செய்த யாகம் முதலான புண்ய கர்மாக்களோ, நந்தவனம் போடுகிறது, கோ ஸம்ரக்ஷணம், அன்னதானம், வேத சாஸ்திர பாடசாலை முதலான புண்யங்களோ, பிள்ளைகளோ, பசுக்களோ, எல்லாவிதமான ஸம்பத்தும் அதிதியை ஸத்காரம் பண்ணாத மூர்க்கனுடைய க்ரகத்தில் நசித்துவிடும். யதிருச்சையாய் வந்த அதிதியை ஸத்காரம் செய்யாத மனிதன் புத்திமானல்ல. ஆகையால் இந்த அதிதியை உபேக்ஷிக்கக்கூடாது. அதிலும் ப்ராமணனாக தோன்றுகிறது" என்று மந்த்ரிகளும் பாரியையும் தர்மராஜாவுக்கு விசதமாகச் சொன்னார்கள். உடனே ம்ருத்யுவும் அதைக் கேட்ட மாத்ரத்தில் பரபரப்புடன் நசிகேதஸ்ஸை எதிர்கொண்டழைத்து அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் முதலான உபசாரங்களாலும் பூஜித்து ஆஸனத்தில் உட்காரவைத்து ரொம்பவும் வணக்கமாக பிரார்த்தித்துக்கொண்டான்.

"ஓ ப்ராமணோத்தமரே! தாங்கள் அதிதியாக என்க்ரஹத்திற்கு வந்ததினால் நான் நமஸ்காரம் பண்ணுவதற்கு அர்ஹனாக தாங்கள் ஆகிவிட்டீர்கள். ஆகையால் தங்களுக்கு நான் நமஸ்காரம் பண்ணுகிறேன். தாங்கள் சாப்பிடாமலே என் க்ரஹத்தில் வசித்த தோஷத்

தால் என்க்ரஹத்திலுள்ள ஸம்பத்துகளுக்கு குறைவுவராமல் வ்ருத்தி யாகும்படி தாங்கள் ஆசிர்வதிக்கவேண்டும். தாங்கள் ஸ்வயமாக சம தமாதி ஸம்பன்னுளானாலும் இவ்விதம் ப்ரார்த்தித்துக்கொள்ளவேண்டியது என் கடமையாகும். யாதொருகாரணத்தால் தாங்கள் மூன்று ராத்திரிகள் போஜனமில்லாமலே என் க்ரஹத்தில் வசிக்கும்படி நேர்ந்ததோ அக்காரணத்தால் மூன்று வரனை தங்களுக்கு நான் கொடுக்கிறேன், கேட்டுக்கொள்ளலாம்" என்று தர்மராஜாவானவன் நசிகேதஸ்ஸினிடம் ப்ரார்த்தித்துக்கொண்டான்.

நசிகேதஸ்ஸோ ஹே ம்ருத்யுவே! எனக்கு வரங் கொடுக்க வேண்டுமென்று எண்ணினுல் நான் முதல்வரனுக வேட்டுக்கொள்வது இதுதான். என் தகப்பனுரானவர் எதோ நமது பையனை கோபத்தால் சொல்லிவிட்டோமே யமலோகம் போய் என்ன செய்கிருனே என்ற கவலையில்லாமலும், நிர்மலமான மனதோடுகூடியவராயும், என் விஷயத்தில் கோபமில்லாமலும், உன்னுல் திருப்பியனுப்பப்பட்ட என்னை நம்முடைய பையன்தான் என்றறிந்து என்னிடத்தில் அநுக்ரகபுத்தியோடுகூடினவராயும், இருக்கும்படி என் பிதாவுக்கு அநுக்ரகம் செய்து என்னை பிதாவினுடைய சமீபம் அனுப்புவதே முதல் வரனுகும். அதைக்கேட்ட தர்மராஜாவும் நசிகேதஸ்ஸே நீ கேட்டபடியே நான் உன்னை முன்போலவே ஸந்தோஷமான மனதோடு வறவேற்பார் என்று முதல் வரனையும் நசிகேதஸ்ஸுக்கு தர்மராஜா கொடுத்துவிட்டார். பிறகு நசிகேதஸ் இரண்டாவது வரனுக கேட்டுக்கொண்டதோ, மிருத்யுவே! ஸ்வர்க்க லோகத்தில் வ்யாதிகளால் எற்படுகிற பயம் கொஞ்சமேனும் இல்லையென்று தெரிகிறது. நீயும் இந்த பூலோகத்தில் எவ்வளவு சீக்கிரமாக சஞ்சரிக்கிருயோ அவ்வளவு சீக்கிரமாக அந்தலோகத்தில் போகிறதில்லையென்றும் தெரி

கிறது. ஸ்வர்க்கலோகத்திலுள்ளவர்களுக்கு கிழத்தன்மையில்லாத தினுல் பூலோகத்தில் உள்ளவர்களைப்போல் ஸ்வர்க்க லோகத்தில் உள்ளவர்கள் உனக்கு பயப்படுகிறதில்லை. பசி, தாகமும், ஸ்வர்க்க லோகத்தில் உள்ளவர்களுக்கு இல்லை. ஆகையால் அந்த லோகம் விசேஷமான லோகம் என்று தெரிகிறது. அந்த லோகத்தையடை வதற்கு அக்கினியே முக்ய சாதனமென்றும் சாஸ்திரங்களில் சொல் லப்படுகிறது. அந்த அக்கினியின் ஸ்வரூபமோ உனக்கு அவச்யம் தெரிந்திருக்கலாம். ஆகையால் அந்த அக்கினியினுடைய தத்து வத்தை எனக்கு நீ சொல்லவேண்டும். அந்த அக்கினியை ஆதானம் செய்துகொண்டு உபாஸிக்கிறவர்கள் ஸ்வர்க்கலோகத்தையடைந்து மறிக்காமலிருக்கும் தன்மையை அடைகிறார்களல்லவா ஆகையால் அவ்விதமான மகிமைதங்கிய ஸ்வர்க்கலோகத்தையடைவதற்கு ஸாதன மான அக்கினியினுடைய ஸ்வருபத்தை தெரிந்துகொள்ளவேண்டிய தவசியமல்லவா! அதை எனக்கு தாங்கள் சொல்லவேண்டும். இது தான் இரண்டாவது வரனுகும், என்று நசிகேதஸ் தர்மராஜா வினிடம் இரண்டாவது வரனை கேட்டுக்கொண்டான்.

தர்ம ராஜாவோ நசிகேதஸ்ஸே! உன்னுடைய விஷயத்தில் நான் ரொம்பவும் சந்தோஷமடைகிறேன். ஸ்வர்க்க லோகத்திற்கு ஸாதன மான அக்கினியை நான் அறிந்தவனே. அந்த அக்கினியினுடைய தத்வமோ வித்வான்களுடைய புத்தியாகிய குகையில் ரொம்பவும் கோப்யமாக விளங்கிவரக்கூடியது. லோகத்தினுடைய ஸ்திதிக்கும் அந்த அக்கினிதான் முக்யமான ஆச்ரயமாகும். அவ்விதமான மகிமை தங்கிய அக்கினியை நான் உனக்கு சொல்லுகிறேன் என்று ப்ரதிக்ஞை செய்துவிட்டு அக்கினி தத்வமானது ப்ரஹதாரண்யக உபநிஷத்தில் சொல்லப்பட்டபடி லோகங்களுக்குள் முந்தின சரீரி

யான ஹிரண்யகர்பஸ்வரூபமானதினால் லோகத்திற்கு ஆதிகாரண மாக ஆகிவிட்டது. அந்த அக்கினியினுடைய தத்வத்தை விசத மாக மிருத்யுவானவர் உபதேசித்தார். அத்துடன் சயனம் என்ற உத்தமமான கர்மாவில் அக்கினியை சயனம் செய்வதற்கு இஷ்டகை கள் (பச்சை வெட்டு செங்கல்கள்) எவ்வளவு உண்டோ அந்த இஷ் டகைகளால் சயனம் செய்யப்படுகிற அக்கினியினுடைய அவாந்திர பேதங்கள் எவ்வளவுகள் உண்டோ அதுகளின் சாங்கோபாங்கமான தத்வங்களையும் விசதமாக ம்ருத்யுவானவர் உபதேசித்தவுடன் நசி கேதஸ்ஸும் மகா புத்திமானனதினால் ம்ருத்யு உபதேசித்தபடியே அதிசூக்ஷமமான தத்வத்தையும் விவரமான உதாகரணங்களோடு திருப்பி தான் சொல்லி விட்டார். நசிகேதஸ்ஸினுடைய புத்தி சக்தியைப்பார்த்து தர்மராஜாவுக்கோ சந்தோஷம் அளவிட முடியா மல் ஏற்பட்டு விட்டது ஸந்தோஷத்தால் நசிகேதஸ்ஸைப் பார்த்து ஹே! நசிகேதஸ்ஸே! உன்னுடைய மேதையானது எனக்கு அளவற்ற ஆனந்தத்தை கொடுத்து வருகிறது. நான் சொன்னதை உடன் திருப்பி நீ சொன்னதற்காக உனக்கு நான் முன் கொடுத்த மூன்று வரங்களைக்காட்டிலும் தனியாக நான்காவதாக ஒரு வரனைக் கொடுக்கி றேன். நான்காவதாக கொடுக்கும் வரன் இது. இந்த அக்கினிக்கு இனி உன்னுடைய பெயர் உலகத்தில் விளங்கட்டும். இந்த கனகமாலையை நீ க்ரகித்துக்கொள். புண்ய கர்மாக்களோ, உபாஸனங்களோ, ச்ரே யஸ்ஸுக்கு ஸாதனமாக வேதத்தில் சொல்லப்பட்டது எவ்வளவு உண்டோ அத்தனை புண்யத்தையும் நான் உனக்கு கொடுக்கிறேன் என்று சொல்லி வரனை கொடுத்துவிட்டு க்ரமப்ராதமான மூன்றுவது வரனைகேட்டுக் கொள்ளலாம் என்று மிருத்யு சொன்னார்.

நசிகேதஸ்ஸும் மிருத்யுவைப்பார்த்து ஹே ராஜனே! மூன்று வது வரம்தான் எனக்கு முக்கியமானது. அதை கொடுத்து என்

ஜன்மாவை ஸபலமாக செய்யவேண்டும். அந்த மூன்ருவது வரனே இதுவேதான். அதாவது மனிதன் மறித்தவுடன் ஆத்மா இருக்கிருன், என்று சிலர் சொல்லுகிருர்கள். இல்லையென்று சிலர் சொல்லுகிருர்கள். அதனுடைய விஷயத்தை நிர்ணயம் செய்து எனக்கு உபதேசிக்கவேண்டும். அதுதான் என்னுடைய மூன்ருவது வரனுகும், என்று ஆத்மதத்வக்ஞானத்தை மூன்ருவது வரனுக நசிகேதஸ்ஸானவன் ம்ருத்யுவினிடம் ப்ரார்த்தித்தார். ம்ருத்யுவும் ஆத்ம தத்வத்தை ப்ராம்மணகுமாரன் கேட்கிருனே, அந்த ஞானத்திற்கு இவன் அர்ஹனு இல்லையா என்றதை பரீக்ஷித்து தெரிந்து கொள்ளுவதற்காக நசிகேதஸ்ஸை ப்ரலோபகப்படுத்தினுன். ஹே ரிஷிபுத்ரனே! தேவாளுடைய கோஷ்டியில்கூட இந்த விஷயம் நிர்ணயிக்கமுடியாத ஸ்திதியில் இருந்துவருகிறது. இது ஸுலபமாக தெரிந்துகொள்ளக்கூடிய விஷயமல்ல. ரொம்பவும் ஸூக்ஷ்மமானது. எதற்காக நீ இந்த விஷயத்தில் கஷ்டப்படவேண்டும். வேறு எதாவது நல்லவரனுகக் கேட்டுக்கொள். வீணுக நீ கேட்டு நான் கொடுக்கவில்லை என்று இந்த விஷயத்தில் என்னை கஷ்டப்படுத்தாதே. நீ மற்றது எதைக்கேட்டாலும் கொடுக்கிறேன் என்று ம்ருத்யுவானவன் ரொம்பவும் நசிகேதஸ்ஸைப்ரலோபகப்படுத்தினுன். மஹா மேதாவியான நசிகேதஸ்ஸோ, ராஜனே! தேவாளுக்குக்கூட இந்த விஷயம் இன்னும் நன்ருய் தெரியவில்லை. இது அறிவது ரொம்பவும் கஷ்டமானது, என்று சொல்லுகிறீர்கள், அதினுலேயே இந்த ஆத்ம தத்வம் ரொம்பவும் மேலானது என்று தெரிகிறது. தங்கள் ஸந்நிதியில் மேலான வரனை கேட்டுக்கொள்ளாமல் சின்ன வரனை எப்படி கேட்பேன், தேவாளுக்கும் இந்த ஆத்ம தத்வம் ஸந்திக்தமாகத்தானிருந்துவருகிறது. பண்டிதர்களுக்கும் இது ஸுலப

மாக அறியக்கூடிய பொருளல்ல என்று தாங்கள் சொல்லுவதி லிருந்தே தாங்கள் இந்த ஆத்ம தத்வத்தை நன்ருய் அறிந்த ப்ரம்ம நிஷ்டாள் என்று தெரிகிறது. தங்களுக்கு அந்த தத்வம் நன்ருய் தெரியாதபோனுல் தேவாளுக்கும் இது ஸந்திக்தம் என்று எப்படி சொல்லமுடியும். ஆகையால் ஆத்மதத்வத்தை நன்ருய் அறிந்த ப்ரம்மநிஷ்டாள் என்று தங்களை நான் தீர்மானம் பண்ணுகிறேன். தங்களைவிட்டால் வேறு உபதேஷ்டா அகப்படுவது அறிது. ஆத்ம தத்வத்தைக்காட்டிலும் மேலான வஸ்துவுமில்லை. ஆகையால் இந்த் வரனை தங்களிடம்தான் நான் கேட்டு அறியவேண்டும் என்று ஒரே வீம்பாக தான் ஆத்ம தத்வத்தை அறிந்துகொள்ள ஆவலுள்ளவனுக இருப்பதை தெரிவித்தான். பிறகும் தர்மராஜாவானவர் தீர்க்க மான ஆயுள், புத்ர பௌத்ராதி ஸம்பத்து, பச்வாதி ஸம்பத்து, யானைகள், குதிரைகள், தங்கரதம், திவ்ய கன்னிகைகள் இதுகளை கொடுத்து இதுகளை மூன்ருவது வரனுக பெற்றுக்கொள் என்று சொல்லியும் கொஞ்சமேனும் நசிகேதஸ் சலிக்கவில்லை. ம்ருத்யு வுக்கு வெகு சந்தோஷம் உண்டாய்விட்டது. நசிகேதஸ்ஸே! உன்னை நான் எவ்வளவு ப்ரலோபப்படுத்தியும் உன் புத்தி கொஞ்சமேனும் சலனத்தையடையவில்லை. ஆத்மவித்யையை அடையவேண்டும் என்ற ஆவல்தான் தீவ்ரமாக இருந்துவருகிறது. ஆகையால் நீதான் உத்தமாதிகாரியென்று ச்லாகித்துவிட்டு,

“ந ஜாயதே ம்ரியதேவா” என்றது முதலான மந்த்ரங்களால் ஆத்மதத்வத்தை தர்மராஜாவானவர் நசிகேதஸ்ஸுக்கு உபதேசித் தார். இந்த உபதேசஸாரத்தைக் கவனித்தாலேயே ப்ரத்யக்ஷ ப்ரமா ணத்திற்கு ஆத்ம தத்வத்தில் அவகாசமேயில்லையென்பது ப்ரத்யக்ஷ மாய் விளங்கும். ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமான பதார்த்தத்தில்

ஸந்தேகம் ஏற்படுமா? ப்ரக்ருதத்திலேயோ மனிதன் மறித்தவுடன் ஆத்மா இருக்கிறுனு இல்லையா என்ற ஸந்தேகத்தையோ நசிகேதஸ் ப்ரகாசப்படுத்தியிருக்கிறுர். தவிரவும் ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமான பதார்த்தத்தில் தேவாளுக்குத்தான் ஸந்தேகம் வரக்கூடுமா? தேவாளுக்குத் தெரியாத விஷயம் ஏதாவது உண்டா? ஆகையால் ஆத்ம தத்வம் ஸந்திக்தமாக இருப்பதினுல் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு ஆத்மதத்வம் விஷயமாகவே ஆகாது. அவ்விதமிருக்கும்பொழுது எந்த ப்ரமாணத்திற்கு ஆத்ம தத்வம் விஷயமாகாதோ அந்த ப்ரமாணத்தால் ஆத்ம தத்வத்தை நிரூபணம் செய்யவேண்டும் என்ற பூர்வபக்ஷிகளுடைய ஆக்ரகமானது, துராக்ரகமாகத்தான் ஆகும். "அஹம் கச்சாமி" "கௌரோஹம்" என்றது முதலான ப்ரத்யக்ஷ அநுபவத்திலோ, தேஹம் இந்திரியம் முதலான அநாத்மாவில் அத்யாஸம் செய்யப்பட்ட மித்யாபூதமான ஆத்ம தத்வம்தான் விஷயமாகுமன்னியில் சுத்தமான ஆத்மதத்வம் விஷயமாகாது. சுத்தமான ஆத்ம தத்வத்தையோ வேதப்ரமாணம் ஒன்றைக்கொண்டு தான் தெரிந்துகொள்ளக்கூடும்.

அதனுல் தேஹமே ஆத்மாவென்று சொல்கிற சார்வாகாளுக்கு அபிமதமான ப்ரத்யக்ஷப்ரமாணமானது நிரஸனம் செய்யப்பட்டதாக ஆகின்றது. முன்பு பூர்வபக்ஷத்தில் தேஹம்தான் ஆத்மா என்றதற்கு ஸாதகமாக யாதொரு ச்ருதி ப்ரமாணமானது உபந்யஸிக்கப்பட்டதோ அதை பகவானுன ஸ்ரீ க்ருஷ்ணன் "யயேனம் வேத்திஹந்தாரம்" என்ற ச்லோகத்தால் நிராகரிக்கின்றுர். அதாவது எவனெருவன், இந்த ஆத்மதத்வத்தை ஹனனம் என்ற க்ரியைக்கு கர்த்தாவாக நினைக்கின்றுனே, அப்படியே எவனெருவன் இந்த ஆத்ம தத்வத்தை ஹனனம் என்ற க்ரியைக்கு கர்மாவாகவும் நினைக்கின்றுனே அவ்விரு

வர்களும் அவிவேகிகளே. தேஹத்திற்கு ஆத்மதத்வம் வேறானது என்ற உண்மையை அறியாதவர்கள் ஆத்மாவானவன் கொல்கிறவனு மல்ல, சொல்லப்படுகிறவனுமல்ல என்ற அர்த்தத்தை "யயேனம் வேத்தி ஹந்தாரம்" என்ற ச்லோகத்தால் பகவான் காட்டுகிறபடியால் தேஹமே ஆத்மா என்பதில் யாதொரு ச்ருதி ப்ரமாணமானது பூர்வ பக்ஷிகளால் உபந்யஸிக்கப்பட்டதோ அது தள்ளப்பட்டதாக ஆகின் றது. அநித்யமாயும், ஜடமாயும், பரிச்சின்னமாயும், துக்கரூபமாயும் உள்ள அநாத்மாவான தேஹத்தில் தான் என்று அத்யாஸம் பண்ணப் பட்ட ஆத்மாவை விஷயீகரிக்கிற சில அநுவாதரூபமான ச்ருதி ப்ரமாணமானது தென்படுவதால் அதைக்கொண்டு அதனுடைய உண்மை தெரியாத சார்வாகர்கள் தேஹாத்மவாதத்திற்கு ப்ரமாணம் அகப்பட்டதாக சொல்லிக்கொண்டு கர்ஜிப்பதுமாகவும் தப்பானது என்ற பருவிதமாக பகவான் உபதேசிப்பதிலிருந்து வெளியாகிறது.

ப்ராம்மணனை கொல்லக்கூடாது என்ற ச்ருதியோ அப்படியே ப்ராம்மணனைக் கொன்றதற்கு அச்வமேதத்தை ப்ராயச்சித்தமாக விதக்கும் ச்ருதியோ, ஆத்மாவை ஹனனம் என்ற க்ரியைக்குக் கர்த்தா என்றோ கர்மா என்றோ சொல்லுவதில் தாத்பர்யம் உள்ள தாக ஆகாது. தேகமும் ஆத்மாவும் ஒன்று என்ற அத்யாஸத்தால் தேஹத்தின் தர்மமாகிய ஹனனக்ரியையின் கர்த்ருத்வத்தையோ கர்மத்வத்தையோ ஆத்மாவினிடத்தில் அவிவேகிகளான ஜனங்கள் ஆரோபணம் செய்துகொண்டு அனுபவிக்கும் லோகஸித்தமான அனுபவத்தை அனுவாதம் செய்துகொண்டு ஹனனக்கிரியையின் கர்த்ருத்வத்தையோ கர்மத்வத்தையோ நிஷேதம் செய்வதற்காக ப்ராம்ணனைக் கொல்லக்கூடாது என்ற ச்ருதியானது ப்ரவிருத் தித்ததே தவிர, ஆத்மாவை தேஹம்தான் என்று தீர்மானிப்பதற்கோ

ஆத்மா ஒரு க்ரியையில் கர்த்தாவாகவோ, கர்மாவாகவோ, ஆகிறான் என்று சொல்லுவதற்கோ வந்ததல்ல. ஆத்மஸ்வரூபம் அஸங்கமான ஸ்வபாவமுள்ளதுதான் த்ரேகத்திற்கும் வேறானது. தேக ஆத்ம ஐக்கிய அத்யாஸத்தால் ஆத்மாவினிடத்தில் ஆரோபிக்கப்பட்ட ஹனனக்ரியா கர்த்ருத்வத்தை நிமித்தமாக வைத்துக்கொண்டுதான் பிரம்மஹத்தி தோஷத்தினின்றும் விடுபடுவதற்கு அச்வமேதயாகத்தை ப்ராயச்சித்தமாகவும் ச்ருதியானது விதித்தது. அதனாலும் ஆத்மா அசுத்தமென்றோ தேஹம்தானென்றோ ஆய்விட்டது.

ஆகையால் தேஹாத்மவாதிகளுக்கு தன்னுடைய ஸித்தாந்தத்தில் ச்ருத ப்ரமாணத்தை நிரூபணம் செய்யமுடியாது. ப்ரத்யக்ஷப்ப்ரமணமோ உண்மையில் ஆத்மா இல்லாததான தேஹத்தை ஆத்மா போல் அத்யாஸம் செய்துகொண்டு வ்யவஹாரம் செய்யப்படுகிற மித்யாபூதமான தேஹாத்மத்வத்தை விஷயீகரிக்குமானதினால் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தாலும் தேஹாத்மவாதத்தை ருஜுப் படுத்தமுடியாது. தேஹத்திற்கு ஆத்மஸ்வரூபம் வேறு என்பதிலோ ச்ருதியே ப்ரமாணமாகும், ச்ருதியைக்கொண்டுமாத்திரம் தெரிந்துகொள்ளவேண்டிய தத்வத்தில் சுருதியைத்தானே ப்ரமாணமாய் நிருபணம் செய்வது அழகாகும். அதை அநுஸரித்துத்தான் பகவானான வாஸுதேவனும் கடவல்லிமந்த்ரமாகிய நஜாயதே என்ற ச்ருதியை ஆத்மா தேகத்திற்கு வேறானது என்ற ஸித்தாந்தத்தில் ப்ரமாணமாக உபந்யஸித்தார். அந்த மந்த்ரத்திலோ ஆத்மாவுக்கு ஜன்மாவோ மரணமோ பரிணாமமோ வ்ருத்தியோ அபக்ஷயமோ இந்த விகாரங்கள் இல்லை என்று காரணத்தோடு குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேஹத்திற்கோ இந்த விகாரங்கள் உண்டென்பதும் ப்ரத்தியக்ஷ ப்ரமாண ஸித்தமானது. ஜன்மம் மரணம் முதலான விகாரங்களோடு

கூடின தேஹமும் மேற்சொன்ன விகாரங்கள் இல்லாததான ஆத்மாவும் பரஸ்பரம் விருத்தமான தர்மங்களோடு கூடிக்கொண்டிருக்கும் காரணத்தால் எப்படி ஒன்ருக ஆகக்கூடும், ஒன்ருக ஆகாதுதான். தேஹம் வேறு, ஆத்மா வேறு என்றதுதான் வேதத்திற்கு ஸம்மதமான ஸித்தாந்தமாகும். நசிகேதஸ்ஸூம் தேஹம் போகும்பொழுது ஆத்மா இருக்காறு இல்லையா என்று கேட்டதற்கு ம்ருத்யுவும் சரீரம் அழியும்பொழுது ஆத்மா அழிகிறதில்லை. ஆத்மவஸ்து ஸத்தியமாக இருக்கத்தான் இருக்கு என்று உபதேசித்தார்.

இதனுல் யாதொரு காரணத்தால் ஆத்மவஸ்துவானது அனுதிவஸ்துவாக விளங்கிவருகிறதோ, அதாவது பிறக்கும் ஸ்பாவமுள்ள வஸ்துவின் ஜாதியில் சேர்ந்ததாக ஆகாதோ, அந்த காரணத்தால் சரீரம் பிறக்கும்பொழுதும் ஆத்மா பிறவியை அடைகிறதில்லை. அப்படியே யாதொரு காரணத்தால் ஆத்மாவானது நித்யமான வஸ்துவோ, அதாவது அழியும் ஸ்வபாவமுள்ள ஜாதியில் சேர்ந்ததாக ஆகாதோ, அந்த காரணத்தால் ஆத்மவஸ்துவானது தேஹமானது அழியும்பொழுதும் அழியாததாகவே விளங்கி வருகிறது. இவ்விதம் ஜன்மா என்ற முதல் விகாரமோ மரணம் என்ற கடைசி விகாரமோ ஆத்மாவுக்கு இல்லை என்று சொன்னதினுலேயே பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவிலுள்ள அபக்ஷயம் முதலான மற்ற விகாரங்களும் ஆத்மாவுக்கு இல்லை என்பது ஸித்தமாகும்.

ஆகையால் இவ்விதம் ச்ரௌதப்ரமாணத்தை பரியாலோசனை பண்ணும்பொழுதோ, வித்வான்களுடைய அனுபவத்தை கவனிக்கும் பொழுதோ, ஆத்மவஸ்துவானது ஜடமாயும் பகிரிந்திரியங்களுக்கு புலப்படுவதாயும் உள்ள தேஹத்திற்கு வேறானதுதான் என்றதை அறியவேண்டும். ஆத்மதத்வம் ச்ருதி ஒன்றுக்குத்தான் விஷய

மாகும். அதுவும் விதிமுகமாக விஷயமாகாது. நிஷேதமுகமாகத் தான் விஷயமாகும். அந்த ச்ருதிகளும் ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் செய்யப்பட்ட த்வைதப் ப்ரபஞ்சத்தை இல்லை இல்லை என்று தள்ளி ஸகல கல்பனைக்கும் அதிஷ்டானமாக மீரும். ஆத்ம தத்வத்தில் பரியவஸானத்தை அடைகின்றது. இவ்விதமான ஆத்மதத்வத்தில் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு அவகாசம் எப்படி ஏற்படும்? ஆகையால் தேஹத்தைக்காட்டிலும் ஆத்மா வேறு என்பதை ப்ரத்யக்ஷப் ப்ரமாணத்தால் ருஜுப்படுத்த முடியாமல் போனதற்காக தேஹ வ்யதிரிக்த ஆத்மவாதமானது துர்பலமாக ஆகிவிடாது. அது தான் ப்ரபலமாயும் சாஸ்திர ஸம்மதமாயும் ஆகும்.

ஸூரியனுக்கு ஆத்மஸ்வரூபத்தை ப்ரகாசம் செய்துவைக்கிற சக்தி கிடையாது. ஆத்மாவினுல் ப்ரகாசிப்பிக்கப்படுகிற சூரியனுனவன் ஆத்மாவை எவ்விதம் ப்ரகாசம் செய்துவைப்பன். அதனுல் சூரியப் ப்ரகாசத்தில் ஆத்மஸ்வரூபம் விஷயமாகாததினுல் ஆத்மஸ்வரூபமே இல்லை என்று ஆகிவிடுமா. சூரியனுக்கும் ப்ரகாசகமான ஆத்மஸ்வரூபம் இருக்கவேதான் இருக்கும். அதுபோல் ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களுக்கு எந்த ஆத்மாவினுடைய அதீனமாக ப்ரமேயத்தில் ப்ரவிருத்தி ஸித்திக்கிறதோ அந்த ஆத்மாவானவன் அந்த ப்ரத்யக்ஷப் ப்ரமாணத்திற்கு எப்படி விஷயமாகக் கூடும்? ப்ரமாதாவானவன் ப்ரமாணத்திற்கு விஷயமாக முடியுமா? அதற்காக இந்த ஆத்மதத்வத்தை இல்லை என்றுதான் எப்படி சொல்லமுடியும். ப்ரத்யக்ஷம் முதலான ப்ரமாணங்களுக்கும் ப்ரமேயத்தை விவேசனம் பண்ணுவதில் சக்தியைக் கொடுக்கிறவனுயும் ப்ரமாதாவாகவும் ஸர்வ ஸாக்ஷியான ஆத்மா இருந்தே தீரவேண்டும். ஆகையால் ஆத்மா தேஹத்திற்கு வேறானல் அப்படியே ப்ரத்யக்ஷத்திற்குப் புலப்படட்டுமே. புலப்படாததினுல் ஆத்மா தேகத்திற்கு வேறாகவேஇல்லை.

தேகந்தான் ஆத்மாவாக ஆகும் என்று சொல்லுகிற சாருவாகா ளுடைய ஸித்தாந்தமானது மிகவும் அஸங்கதமாயும் சாஸ்த்ரவிருத்த மாயும் இருக்கும் காரணத்தால் ச்ரேயஸ்ஸை விரும்புகிற ஜனங்களால் உபேக்ஷிக்கத் தகுந்ததாகத் தானுகும். தவிரவும் தேஹாத்மவாத மானது நிர்மூலமானதினுல் அனுதரிக்கத்தகுந்ததே. சாருவாகர்களால் தேஹமே ஆத்மா என்று ஸாதிப்பதில் நிரூபிக்கப்பட்ட ப்ரமாணங்க ளெல்லாம்அவிவேகத்தால் தேஹதாதாத்மியத்தையடைந்த ஆத்மாவை விஷயீகரிக்குமன்னியில் தேஹமே ஆத்மாவென்று ருஜுப்படுத்துவ தில் சக்தியற்றதாக ஆகும் என்பது முன் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா வேறு என்பதிலோ ஆயிரக் கணக்கான ச்ருதிகள் ப்ரமாணமாக முன்வருகின்றன. அதுகளில் கடவல்லி உபநிஷத்திலுள்ள இரண்டு ச்ருதிகளே ப்ராக்ருதத்தில் பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்து தேகவிலக்ஷண ஆத்மவாத மாகிய வைதிக ஸித்தாந்தத்தை நிலைநாட்டினுர். அதில் (யயேனம் வேத்தி ஹந்தாரம்) என்ற ச்ருதி முதலாவதாகவும் (நஜாயதே ம்ருய தேவா கதாசித) என்ற ச்ருதி இரண்டாவதாகவும் ஆகும். அதனு டைய பதவாரியான அர்த்தத்தையோ அடியில்கண்டபடி அரியவும்.

அதாவது (எவனொருவன்) (ஆத்மாவை) (ஹனனம் என்ற க்ரியைக்கு கர்த்தாவாஹ) (அரியாரானே), (அப்படியே எவனொருவன்) (ஆத்மாவை) (ஹனனம் என்ற க்ரியைக்கு கர்மாவாஹ) (அரியாரானே) (அந்த இருவர்களும்) (அரியாதவர்களே அதாவது ஆத்மா தேஹத் துக்கு வேருன வஸ்து என்றதை தெரிந்துகொள்ளாதவர்கள்) (இந்த ஆத்ம வஸ்துவானது) (ஹனன க்ரியைக்கு கர்த்தாவாகவும் ஆகாது) (ஹனனக் கிரியைக்கு கர்மாவாகவும் ஆகாது). இதுதான் முதல் மந்த் ரத்தினுடைய பதவாரியான அர்த்தமாக ஆகும்.

இரண்டாவதோ, (இந்த ஆத்மாவானவன்) (யாதொரு காரணத்தால் முன்காலத்தில் இல்லாதவனாக இருந்து பின்காலத்தில் வந்தவனாக ஆகிறதில்லையோ), (அக்காரணத்தால் இந்த ஆத்மவஸ்துவானது பிறக்கிறதில்லை) (யாதொரு காரணத்தால் இந்த ஆத்மவஸ்துவானது இந்த காலத்தில் இருந்து பின்காலத்தில் இல்லாமல் போகும் என்றது இல்லையோ), (அக்காரணத்தால் இந்த ஆத்மவஸ்துவானது மறிக்கிறதில்லை) (யாதொரு காரணத்தால் பிறப்பில்லையோ, அக்காரணத்தால் இந்த ஆத்மா அஜனாக ஆகிறான்) (யாதொரு காரணத்தால் இந்த ஆத்மவஸ்து மறிக்கிறதில்லையோ அக்காரணத்தால் நித்யனாயும் ஆகிறான்) (இந்த ஆத்மவஸ்து எப்பவும் ஒரே ரூபமாக விளங்கிவருகிறது). இந்த ஆத்மவஸ்து உபாதியில் ஸம்மந்தப்பட்ட காரணத்தால் ஜீரணமான சரீரத்தை விட்டுவிட்டு புதிதான சரீரத்தில் ப்ரவேசிக்கும் ஸ்வபாவமுள்ள அனாதிகாலஸித்தனான பரமபுருஷனே) (இந்த ஆத்மாவானவன் சரீரம் அழியும்பொழுதும் அழியாமல் அதிஷ்டானமாக மீரும் வஸ்துவாக ஆகும்) இதுதான் இரண்டாவது மந்த்ரத்தினுடைய பதவாரியான அர்த்தமாகும்.

(இதனால் ஆத்மவஸ்துவானது தேகத்திற்கு வேறு என்று ஸித்திப்பதினால் பகவான் அர்ஜுனனைப் பார்த்து பீஷ்மர் முதலானவர்களுடைய தேகத்தைப்பார்த்து நீ துக்கப்படுகிறாயா, அல்லது ஆத்மாவைப்பற்றி துக்கப்படுகிறாயா என்று இரண்டுவிதமாக விகல்ப்பம் செய்துகொண்டு க்ரமமாகபகவான் ஸமாதானம் பண்ணி அர்ஜுனனை யுத்தத்தில் ப்ரவிருத்திக்கச் செய்தது, மிகவும் ஸமஞ்சஸமானது என்றது ஸித்தமாகிறது. இதைப்படித்த வாசகர்களுக்கும் தேஹாத்மவாத நிராகரணமும் தேஹவ்யதிரிக்த ஆத்மவாத ஸமர்த்தனமும் லகுவாக விளங்கக்கூடும் என்பது திண்ணம்.

(தொடரும்)

# அர்தோதய புண்யகாலம்

நாளது பவஸ்ஸ தைமீ 21உ இந்த புண்யகாலமானது ஸம்பவிக்கின்றது. இதற்கு அலப்யயோகம் என்று சாஸ்திரங்களில் சொல்லப்படும். இந்த புண்யகாலமானது அடிக்கடி ஸுலபமாய் ஸம்பவிக்கக் கூடியதல்ல. வெகு வருஷங்களுக்கு ஒருதரம் அபூர்வமாய் ஏற்படும். இவ்வருஷம் ப்ராணிகளுடைய அதிர்ஷ்ட வசத்தால் ஏற்பட்டிருக்கிறது. இந்த புண்யகாலத்தில் ஸமுத்திர ஸ்நானம் மிகவும் விசேஷமானது. ஸ்நானமோ, தானமோ, ச்ரார்த்த தர்ப்பணாதிகளோ இந்த புண்யகாலத்தில் ச்ரத்தையுடன் செய்யப்பட்டால் அக்ஷயமான பலமும் பிதுர்க்களுக்கு அக்ஷயமான த்ருப்தியும் பரம ஸௌபாக்கியமும் ப்ராணிகளுக்கு ஏற்படும் என்பது திண்ணம். இந்த புண்ய காலத்தின் ஸ்வரூபத்தை எல்லா ப்ராணிகளும் தெளிவாக அறியும் பொருட்டு அதனுடைய ப்ரமாண வசனங்களும் அந்த ப்ரமாண வசனங்களுக்குச் சரியான எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள வ்யாக்கியானத்தையும் அடியில்கண்டவாறு ஆஸ்திக மஹாஜனங்கள் அறியவும்.

𑌅𑌮𑌾𑌰𑍍𑌕𑌪𑌾𑌤 𑌶𑍍𑌰𑌵𑌣𑍈𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌚𑍇𑌤𑍍 𑌪𑍌𑌷𑍍𑌯𑌮𑌾𑌘𑌯𑍋𑌃।
𑌅𑌰𑍍𑌧𑍋𑌦𑌯𑌸𑍍𑌸 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯 𑌗𑍍𑌰𑌹𑍈𑌸𑍍𑌸𑌮𑌃॥

அமார்கபாத ச்ரவணை: யுக்தாசேது புஷ்யமாகயோ:
அர்தோதயஸ்ஸ விக்ஞேய: கோடிஸூர்ய க்ருஹைஸ்ஸம:

இந்த ப்ரமாணவசனமானது வைத்தியநாததீக்ஷிதீயம் ச்ராத்தகாண்டத்தில் (அமாயாம் யோக விசேஷ:) என்ற ப்ரகரணத்தில் உள்ளது.

இதன்பொருளோ, தைமாஸத்திலோ, மாசி மாஸத்திலோ அமாவாஸையானது ஞாயிற்றுக்கிழமையோடும் வ்யதீபாதத்தோடும் திருவோண நக்ஷத்ரத்தோடும் கூடியதாக வந்தால் அதற்கு அர்தோதயம் என்று பெயர். அது ஒரு பெரிய (அலப்யயோகம்) அறிதான புண்ய காலமாகும். கோடி ஸூர்ய க்ரஹணத்திற்கு ஸமானமான வைபவமுள்ளதாக ஆகும். ஞாயிற்றுக்கிழமையைப் பற்றியும் திருவோண நக்ஷத்திரத்தைப்பற்றியும் என்ன என்று ப்ராணிகளுக்கு ஸந்தேஹம் வரக் காரணமில்லை. வ்யதீபாதம் என்றால் என்ன என்று கேட்கக் கூடும். அதனுடைய லக்ஷணத்தை ப்ரமாண வசனமூலமாக அடியில் கண்டபடி அறியவும்.

𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌶𑍍𑌵𑌿 𑌧𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾 𑌨𑌾𑌗𑌦𑍈𑌵𑌤 𑌮𑌸𑍍𑌤𑌕𑍈𑌃।
𑌯𑌦𑍍𑌯𑌮𑌾𑌰 𑌵𑌿𑌵𑌾𑌰𑍇𑌣 𑌵𑍍𑌯𑌤𑍀𑌪𑌾𑌤𑌸𑍍𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ச்ரவணாச்வி தனிஷ்டாத்ரா நாகதைவத மஸ்தகை: ।
யத்யமார விவாரேண வ்யதீபாதஸ்ஸ உச்யதே. ॥

இந்த ச்லோகமானது முன்சொன்ன வைத்யநாத தீக்ஷியத்தில் ச்ராத்த காண்டத்திலேயே தர்ச ச்ராத்த நிர்ணய ப்ரகரணத்தில் உள்ளது. இதின் பொருளோ திருவோண நக்ஷத்திரம், அச்வதி நக்ஷத்திரம், தனிஷ்டா நக்ஷத்திரம், ஆயில்ய நக்ஷத்திரம், ம்ருகசீர்ஷ நக்ஷத்திரம் இந்த நக்ஷத்திரங்களுக்குள் ஏதாவது ஒரு நக்ஷத்ரத்தோடும் ஞாயிற்றுக்கிழமையோடும் அமாவாஸையானது கூடினதாக இருந்தால் வ்யதீபாதம் என்று சொல்லப்படும். அதுவே தைமாதத்திலோ மாசிமாதத்திலோ உள்ள அமாவாஸையாக ஸம்பவித்தால் அர்தோதய புண்யகாலமென்று பெயரை அடைகிறது.

சிவர்கள் வ்யதீபாதத்தினுடைய கடைசி பாகமும் அமாவாஸையினுடைய முதல்பாகமும் திருவோண நக்ஷத்திரத்தினுடைய நடு

பாகமும் ஞாயிற்றுக்கிழமை தினத்தில் ஸூரியோதய காலத்தில் சேர்ந்தால் அன்றுதான் அர்தோதய புண்யகாலமென்று சொல்லு வார்கள். ஆகிலும் அவ்விதம் சேரும் தினத்தில் விசேஷமான ஒரு யோகத்தைச் சொல்லவேண்டுமே தவிர, அதில் ஏதாவது கொஞ்சம் குறைந்திருந்தாலும் அர்தோதய புண்யகாலந்தான் என்பதில் ஆக்ஷே பணையில்லை. சூர்யோதயத்திற்குப் பிற்பாடு ஞாயிற்றுக்கிழமை தினம் அமாவாஸை வந்தாலுமே அதை ஒரு விசேஷ புண்யகாலமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மஹாபாரத வசனமே ப்ரமாண மாகும். அந்த வசனத்தையும் அடியில்கண்டபடி அறியவும்.

𑌅𑌰𑍍𑌕𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌵𑍍𑌯𑌤𑍀𑌪𑌾𑌤 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌽𑌮𑌾 𑌪𑍁𑌷𑍍𑌯𑌮𑌾𑌘𑌯𑍋𑌃 ।
𑌅𑌸𑌾𑌵𑌰𑍍𑌧𑍋𑌦𑌯𑍋 𑌯𑍋𑌗𑌃 𑌕𑍋𑌟𑍍𑌯𑌰𑍍𑌕 𑌗𑍍𑌰𑌹𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 ॥

அர்க்கச்ருதி வ்யதீபாத யுக்தாஅமா புஷ்யமாகயோ:
அஸாவர்தோதயோ யோக: கோட்யர்க்க க்ரஹஸன்னிப:.

இதன் பொருளோ ஸூர்யோதயம் என்ற நியமத்தை அபே க்ஷிக்காமலே ஞாயிற்றுக்கிழமையோடும் திருவோண நக்ஷத்திரத்தோ டும் வ்யதீ பாதத்தோடும் தை அமாவாஸையோ சிவராத்திரி அமா வாஸையோ சேர்ந்தால் அது அர்தோதய புண்யகாலந்தான். உதய காலத்தை அபேக்ஷிக்கிற ஸங்க்ரஹக்காராளுடைய ஸித்தாந்தமானது விசேஷ யோகத்தைத் தான் காட்டும். உதயகாலநியமம் வேண்டாம் என்பதற்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம் ச்ரார்த்தகாண்டத்திலேயே க்ரந்தகர்த்தாவினுடைய அபிப்ராயமே ப்ரமாணமாகும். அதாவது,

𑌗𑍍𑌰𑌹𑌾𑌸𑍍𑌤𑍋𑌦𑌯 𑌸𑌮𑌯𑍇
𑌵𑍍𑌯𑌤𑍀𑌪𑌾𑌤𑌾𑌦𑍍𑌯𑌶𑍍𑌯𑍋𑌗 𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃
𑌉𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌹𑌾𑌸𑌤𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍋𑌕𑍍𑌤 𑌯𑍋𑌗𑍇 𑌸𑌰𑍍𑌵𑍋𑌦𑌯 𑌵𑌤𑍍 ॥

பாஸ்கரோதய ஸமயே
ஏதாதிருசயோகச் சேது விசேஷ:
உதயானந்தரம் அமாசேதபி பாரதவசநா
அனுரோதேன யோகே அர்தோதய ஏவ.

அர்தோதய புண்யகாலமானது ஸ்நான தானம் தேவதாராதனம் முதலான தேவகார்யத்திற்கு தான் அர்ஹம் பித்ரு காரியத்திற்கு அர்ஹமில்லையென்று சிலர் சொல்லுவர்கள் அது ரொம்பவும் தப்பானது.

கோடிஸூரிய க்ரகணத்திற்கு இந்த அர்தோதயத்தை ஸமானமாக சொல்லியிருப்பதினால் ஸூர்யக்ரஹணம் ச்ராத்தார்கமானதுபோல் இதுவும் ச்ராத்தார்ஹம் என்பதில் என்ன ஆக்ஷேபணை. அத்துடன் அர்தோதய புண்யகாலத்தன்று ப்ரத்யாப்தீக ச்ராத்தம் வந்தால் ச்ராத்தம் ஒன்று பண்ணுகிறதா, இரண்டு பண்ணுகிறதா, அதாவது ப்ரத்தியாப்தீக ச்ராத்தத்தைச் செய்து அர்தோதய ச்ராத்தத்தை விட்டுவிடுகிறதா, அர்தோதய ச்ராத்தத்தைச்செய்து ப்ரத்தியாப்தீக ச்ராத்தத்தை விட்டுவிடுகிறதா, ஒரு தினத்தில் இரண்டு சிராத்தம் செய்யக்கூடாதே என்ற விசாரம் வர, ஒரே தேவதையை உத்தேசித்து ஒரு தினத்தில் இரண்டு ச்ராத்தம் செய்யக்கூடாது. ப்ரத்தியாப்தீகத்திலும் அர்தோதயத்திலும் தேவதாபேதமிருப்பதினால் அதாவது ப்ரத்யாப்தீகத்தில் ஏகவர்க்க பித்ருக்கள் தேவதை அர்தோதயத்திலோ இரண்டு வர்க்க பித்ருக்களும் தேவதைகள். இவ்விதம் தேவதாபேதம் ஏற்பட்டுவிட்டதினால் ப்ரத்தியாப்தீக ச்ராத்தம் அர்தோதய ச்ராத்தம் இரண்டையும் செய்தேதான் தீரவேண்டும் என்று ஸித்தாந்தம் பண்ணப்பட்டிருக்கிறபடியால் அர்தோதய புண்யகாலம் ச்ராத்தார்கமான புண்யகாலம்தான் என்ப

தில் ஆக்ஷேபமில்லை. அதனுடைய ப்ரமாண வசனத்தையும் கீழ் கண்டவாறு அறியவும்.

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌬𑍍𑌦𑌿𑌕𑌸𑍍𑌯 𑌚𑌾𑌲𑌭𑍍𑌯 𑌯𑍋𑌗𑍇𑌷𑍁 𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑌚 ।
𑌸𑌂𑌪𑌾𑌤𑍇 𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑍇𑌦𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧 𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥

ப்ரத்யாப்திகஸ்ய சாலப்ய யோகேஷு விஹிதஸ்யச,
ஸம்பாதே தேவதாபேதாத் ச்ராத்த யுக்மம் ஸமாசரேத்.

க்ரஹணம், அர்தோதய புண்யகாலம், மஹோதய புண்யகாலம் முதலான அலப்ய யோகத்தில் செய்யவேண்டிய ச்ரார்த்தத்திற்கும் ப்ரத்யாப்திக ச்ரார்த்தத்திற்கும் ஒரே தினத்தில் ஸம்பவம் ஏற்பட்டால் தேவதைகள் வெவ்வேறாக ஆனதினால் இரண்டு ச்ரார்த்தத்தையும் செய்யவேண்டும் என்று மேல்சொன்ன ச்லோகத்தின் கருத்து. ஆகையால் ஆஸ்திக மஹாஜனங்கள் நாளது தைமீ 21வயில் வரும் அர்தோதய புண்யகாலத்தில் புண்யதீர்த்த ஸ்நானம், ஸத்பாத்ர தானம், ஸாங்கோபாங்கமாக அபீஷ்டதேவதாராதனம், வித்தசாட்டியமில்லாமல் வர்க்கத்துவய பிதுருச்ரார்த்தம் முதலான ஸத்கர்மாக்களை ச்ரத்தா பக்தியுடன் அனுஷ்டித்து அவரவர்கள் ஜன்ம ஸாபல்யத்தை அடைவதோடும் கூட கலிதோஷத்தினின்றும் விடுபட்டவர்களாக ஆகி ஸகலவிதமான ஸௌபாக்கியத்தையும் அடைவீர்களாக.

தர்மமே ஸத்தியம்! தர்மமே ஜெயம்!!
தர்மமே பந்து!!! தர்மமே மித்திரன்!!!!
தர்மமே சரணம்.
ஓம் தத் ஸத்.

(குறிப்பு) ஒரு தேவதையை உத்தேசித்து ஒரே தினத்தில் இரண்டு ச்ராத்தம் செய்யக்கூடாது என்று முன்பு சொல்லியிருப்பினும் தர்சத்திற்கும் அர்தோதயத்திற்கும் தேவதை ஒன்றானாலும் தர்சத்தை அபேக்ஷித்து அர்தோதயம் விசேஷ புண்யகாலமானதினாலும் அன்று அர்தோதய ச்ராத்தத்தைத்தான் அனுஷ்டிக்க வேண்டியது.

4

## 50 POST CARDS
## PRINTED WITH YOU NAME FREE

**The Light of Asia.**

**(A Humourous cultural Monthly.**

Annual Subscription Re. 1 only. " It contains much readable matter of the same vairety neither too serious nor too light " regarding view of philosoyhy and religion. Highly spoken of by Many.

5000 வாசகர்களிடம் இலவசமாய் விளம்பரம் செய்ய இதுவே நல்ல சமயம்.

Wanted Agents liberal commisson

*Apply—Manager*

**Light of Asia**

**Teppakulam, Trichy.**

# INTERNAL HAIR DYE.

## (TONIC.)

Its 40 days internal Use turns Gray and White Hairs into Black for Life. Besides it Cures Baldness, Wrinkles. Dental troubles, Constipation, Piles, increases memory, Brain Power, Eye Sight, Appetite, Digestion. Purifies Blood, Tones, Nerves, removes lack of retention. Loss of manhood, Moks young Again, It is Elexir of Life in prolonging age. On failure price Refunded.

**Price 40 doses Postage Rs. 11.**

**WHITE LEPROSY or LEUCODERMA.**

Sure and permanent cure guaranteed by my Harmless Fakiri Buti in one day only. If not, Price Refunded.

**Price per Box Rs. 4.**

*Apply at once to:—The Manager:—*

**INDIAN MEDICAL WORKS**

**Purnea 502 E. B. Ry.**

# ஸ்ரீமத் பாகவதம்.

## ச்ருதி கீதை—தொடர்ச்சி.

𑌦𑍃𑌤𑌯𑌇𑌵 𑌶𑍍𑌵𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍁𑌭𑍃𑌤𑍋 𑌯𑌦𑌿𑌤𑍇𑌽𑌨𑍁𑌵𑌿𑌧𑌾𑌃
𑌮𑌹𑌦𑌹𑌮𑌾𑌦𑌯𑍋 𑌽𑌣𑍍𑌡𑌮𑌸𑍃𑌜𑌨𑍍 𑌯𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌤𑌃 ।
𑌪𑍁𑌰𑍁𑌷 𑌵𑌿𑌧𑍋𑌽𑌨𑍍𑌵𑌯𑍋𑌽𑌤𑍍𑌰 𑌚𑌰𑌮𑍋𑌽𑌨𑍍𑌨 𑌮𑌯𑌾𑌦𑌿𑌷𑍁𑌯𑌃
𑌸𑌦𑌸𑌤𑌃 𑌪𑌰𑌂𑌤𑍍𑌵𑌮𑌥 𑌯𑌦𑍇𑌷𑍍𑌵 𑌶𑍇𑌷𑌮𑍃𑌤𑌂 ॥

| | | |
|---|---|---|
| 𑌮𑌹𑌦𑌹𑌮𑌾𑌦𑌯𑌃 (மஹதஹ மாதய:) | = | மஹத் தத்வம் அஹங்காரம் தன் மாத்திரை முதலானதுகள் |
| 𑌯𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌤𑌃 (யதநுக்ரஹத:) | = | எந்த பரமபுருஷனுடைய அனுப்ரவேசத்தால் ஸாமர்த்யத்தை அடைந்ததுகளாகஆய் |
| 𑌅𑌣𑍍𑌡𑌂 (அண்டம்) | = | ஸமஷ்டி வ்யஷ்டி ரூபமான சரீரத்தை |
| 𑌅𑌸𑍃𑌜𑌨𑍍 (அஸ்ருஜந்) | = | ஸ்ருஷ்டிக்கின்றதுகளோ |
| 𑌤𑌸𑍍𑌯 (தஸ்ய) | = | அப்பேர்ப்பட்ட |
| 𑌤𑍇 (தே) | = | உன்னுடைய |
| 𑌅𑌨𑍁𑌵𑌿𑌧𑌾𑌃 (அநுவிதா:) | = | பக்தர்களாக |
| 𑌅𑌸𑍁𑌭𑍃𑌤𑌃 (அஸுப்ருத:) | = | ப்ராணிகள் |
| 𑌯𑌦𑌿𑌸𑍍𑌯𑍁𑌃 (யதிஸ்யு:) | = | ஆகுவார்களேயானல் |
| 𑌤𑌰𑍍𑌹𑌿 (தர்ஹி) | = | அப்பொழுது |
| 𑌤𑍇 (தே) | = | அவர்கள் |

| | | |
|---|---|---|
| ஶ்வஸந்தி (ச்வஸந்தி) | = | ஜீவிக்கிருர்கள் ஸபலமான ஜீவனத் தோடு கூடினவர்களாக ஆகிருர்கள் |
| யஃ (ய:) | = | எவனெருவன் |
| அத்ர (அத்ர) | = | அன்னமயம் முதலான கோசங்களில் |
| யதஃ (யத:) | = | யாதொரு காரணத்தால் |
| அந்வயஃ (அன்வய:) | = | அனுவ்ருத்தி ஏற்படுகிறதோ |
| அதஃ (அத:) | = | அந்தக் காரணத்தினல் |
| புருஷவிதஃ (புருஷ வித:) | = | புருஷாகாரமான அந்தந்த கோசங் களில் அனுப்ரவேசம் பண்ணி அந்தந்த ஆகாரமாக ஆய் கோசங் களை சேஷ்டிக்கச் செய்கிருனே |
| ஸஃ (ஸ:) | = | அந்த பரம்பொருள் |
| த்வமேவ (த்வமேவ) | = | நீதான் |
| யஃ (ய:) | = | எவனெருவன் |
| அந்நமயாதிஷு (அன்ன மயாதிஷு) | = | அன்னமயம் முதலான கோசங்கள் |
| உபதிஶ்யமானேஷு (உபதிச்யமானேஷு) | = | உபதேசம் பண்ணப்படும்பொழுது |
| சரமஃ (சரம:) | = | புச்சவாக்யத்தில் சொல்லப்படுகிருனே |
| ஸோபி (சோபி) | = | அவனும் |
| த்வமேவ (த்வமேவ) | = | நீதான் |
| த்வம் (த்வம்) | = | நீ |
| ஸதஸதஃ (ஸதஸத:) | = | ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபமான கோசங் களுக்கு |
| பரம் (பரம்) | = | வேருனவன் |

யத³ (யத்) = யாதொரு காரணத்தால்

ഏഷു (ஏஷு) = இந்த கோசங்கள்

ബാധിതേഷു (பாதிதேஷு) = பாதிக்கப்படும்பொழுது

അവശേഷം (அவசேஷம்) = அதிஷ்டானமான காரணத்தால் மீதியாக இருக்கும் வஸ்துவோ

അത: (அத:) = அக்காரணத்தாலேயே

ഇദം (இதம்) = நீதான் நிஜமான பொருள்.

(மஹத் தத்வம் அஹங்காரம் முதலானதுகள்) (எந்த பரமாத்மாவினுடைய அனுக்கிரஹத்தால்) (ஸமஷ்டி வ்யஷ்டி ரூபமான சரீரத்தை) (ஸ்ருஷ்டிக்கின்றதுகளோ) (ஹே பரம்பொருளே) (அப்பேர்ப்பட்ட உன்னை) (ப்ராணிகள் பக்திபண்ணினர்களேயானல்) (அவர்கள்தான் ஸபலமாக ஜீவிக்கிறவர்கள்) (இல்லாவிடில் அவர்கள் துருத்திக்கு ஸமானமானவர்கள்) (ஹே பரம்பொருளே நீ அன்னமயம் முதலான ஐந்து கோசங்களில் அனுவர்த்தித்துக்கொண்டிருக்கும் காரணத்தால் அன்னமயம் முதலான கோசங்களுடைய ஆகாரம் போலொத்த ஆகாரத்தோடு கூடினவனுக விளங்கிவருகிறுய்). (ஹே பரம்பொருளே தைத்திரீயோபநிஷத்தானது ஐந்து கோசங்களையும் சொல்லிவிட்டு புச்சவாக்யத்தில் எந்த தத்வத்தைச் சொல்லுகிறதோ அதுவேதான் நீ) (ஹே பரம்பொருளே நீ ஐந்து கோசங்களுக்கும் ஸாக்ஷியாக விளங்குகிறுய்). (ஹே பரம்பொருளே ஐந்து கோசங்கள் அழிந்த பிற்பாடும் நீ அழியாமல் மீருகிறுய்). (ஹே பரம்பொருளே அக்காரணத்தால் நீதான் ஸத்யமான வஸ்து, அதாவது முக்காலத்திலும் அழியாத பொருள்). (ஆகையால் ஹே பரம்பொருளே பிராணிகள் உன்னை பஜனம் செய்து ஜன்ம ஸாபல்யத்தை அடைவது அவச்யமாகும்).

த்ருதயஇவ ச்வஸந்த்ய ஸூப்ருத: யதிதேநு விதா:
மஹதஹமாதயோ அண்டமஸ்ருஜன் யதநுக்ரஹத:
புருஷ விதோன்வயோத்ர சரமோன்ன மயாதிஷூய:
ஸதஸத: பரம் த்வமதயதேஷ்வவ சேஷமிருதம்.

முன் ச்லோகத்தில் வாசுதேவனுடைய உபாஸனத்தை இரண்டு விதமாகப் பிரித்துச் சொல்லப்பட்டது. அதாவது சகல தோஷத்தையும் நிவர்த்தி செய்துவைக்கும் சாமர்த்தியமுள்ள பகவத் கதையாகிற அம்ருதத்தை பானம் செய்துகொண்டு காலத்தை நயனம் செய்வது ஒரு ப்ரகாரமான உபாஸனமாயும் ஸச்சித்ாநந்த ரூபமான வாஸுதேவ பரப்ரம்மத்தை அபேதமாக அநுஸந்தானம் செய்துகொண்டு காலத்தை நயனம் செய்வது மற்றொரு ப்ரகாரமாகவும் பிரித்து இரண்டுவிதமாக பக்தியோகத்தை ச்ருதியானது நிரூபணம்செய்தது. அந்த இரண்டு ப்ரகாரத்தையும் ஒன்றை ஸகுண ப்ரம்மோபாஸனமென்றும், மற்றொன்றை நிர்க்குண ப்ரம்மோபாஸனமென்றும் வகுத்தறிந்து கொள்ளவேண்டும்.

இந்த இரண்டுவிதமான பகவதுபாஸனங்களுக்குள் ஒன்றிலும் ஈடுபடாமல் வீணுக காலத்தைப் போக்குகிற ப்ராணிகளை ச்ருதியே ரொம்பவும் நிந்திக்கிறது. அவர்களை ஆத்மஹத்தி பண்ணினவர்களென்றும், அவிவேகம் அதிகமாக ஏற்படும் ரொம்பவும் அல்பமான ப்ராணிகளிடத்தில் அவர்களுக்குப் பின்பு ஜன்மா ஏற்படுகிறதென்றும், பகவத் ஸ்வரூபத்தை அறியாத காரணத்தால் பெரிய அநர்த்த பரம்பரையை அவர்கள் ஸம்பாதித்துக்கொண்டுவிட்டார்கள் என்றும், மேன்மேலும் துக்கத்தையே அவர்கள் அநுபவிப்பார்கள் என்றும், பகுப்ரகாரமாக ஈசம், கேளம் முதலான உபநிஷத்துக்கள் பகவத் பக்தியில்லாத ப்ராகிருத ஜனங்களை நிந்திக்கின்றன. அதை யநு

ஸரித்தே ஸ்ரீமத் பாகவதத்தில் ச்ருதிகீதையிலுள்ள இந்த ச்ருதியும் பக்தியில்லாத ப்ராக்ருத ஜனங்களே அவர்களுடைய ஜன்மா வீணுக ஆய்விட்டதே என்று பகவானைப் பார்த்தே முறையிடுகிறது.

அதாவது, ஹே வாசுதேவ பரப்ரம்மமே! மஹத் தத்வம், அஹங் காரம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஏழுவிதமான ப்ராக்ருதி விக்ருதிகள் என்ற தத்வம்தான் சமஷ்டியான தேகத்தை யோ வ்யஷ்டியான தேஹத்தையோ ச்ருஷ்டிக்கிறதுகள் என்றதே சாஸ்திரத்தின் மரியாதையாகும். ஆனுல் அந்த ஏழு தத்வங்களும் ஸ்வபாவத்தால் ஜடமானதிஞல் அண்டபிண்டத்தை ச்ருஷ்டிப்பதில் ஸ்வயமாக சக்தியுள்ளதல்ல. உன்னுடைய அநுக்ரகத்தால்தான் அந்த ஏழு தத்வங்களுக்கும் ஒன்றை ச்ருஷ்டிக்கும் சக்தி ஏற்படவேண்டும். நீ அந்த தத்வங்களில் ஸூக்ஷ்ம ரூபமாக அனுப்ரவேசம் பண்ணினுல் தான் அதுகள் ஒரு காரியமாக பரிணமிக்கும் வல்லமையுள்ளதாக ஆகின்றன. சப்தம் என்றதன்மாத்திரையில் உனது ஸ்வரூபம் அநுப்ரவேசம் செய்தவுடன் அந்த தன்மாத்திரையானது ஆகாசம் என்ற மகாபூதத்தை உண்டுபண்ணுகிறது. அப்படியே உன் அநுக்ர கத்தை முன்னிட்டுத்தான் ஸ்பரிச தன்மாத்திரை வாயுவையும் ரூப தன்மாத்திரை தேஜஸ்ஸையும் ரஸதன்மாத்திரை ஜலத்தையும் கந்த தன்மாத்திரை ப்ருதிவையும் க்ரமமாக உண்டுபண்ணுகின்றன. அந்த ஐந்து தன்மாத்திரைகளோ அகங்காரத்தில் நீ அநுப்ரவேசம் செய்த வுடன் அந்த அஹங்காரத்திலே நின்றும் உண்டாகின்றன. அந்த அஹங்காரமும் மஹத் தத்வத்தில் நீ அநுப்ரவேசம் செய்தவுடன் அதிலிருந்தும் உண்டாகின்றது.

உன்னுடைய அநுப்ரவேசரூபமான அநுக்ரமில்லாமல் ஒரு காரணமும் ஒரு காரியத்தையும் உண்டுபண்ணுவதில் வல்லமையுள்ள

தல்ல. அவ்விதமே, ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், ப்ருதிவி என்ற ஐந்து மஹாபூதங்களிலும் உனக்கு அநுப்ரவேசம் ஏற்பட்டவுடன் அதுகள் ஒன்றொன்றும் ஒவ்வொரு காரியத்தைச்ருஷ்டிக்க வல்லமையுள்ளதாக ஆகின்றது. தனித்தனியாக ஆகாசத்தினுடைய ஸத்வாம்சத்திலிருந்து சப்தத்தையனுபவிக்கும் ச்ரோத்ரேந்திரியமும், வாயுவினுடைய ஸத்வாம்சத்திலிருந்து ஸ்பரிசத்தையநுவிக்கும் த்வகிந்திரியமும் தேஜஸ்ஸினுடைய ஸத்வாம்சத்திலிருந்து ரூபத்தையநுவிக்கும் சக்ஷுரிந்திரியமும் ஜலத்தினுடைய ஸத்வாம்சத்திலிருந்து ரஸத்தையநுவிக்கும் ரஸனேந்திரியமும் ப்ரதிவியின் ஸத்வாம்ஸத்திலிருந்து கந்தத்தையநுவிக்கும் க்ராணேந்திரியமும் ஒவ்வொரு பூதத்தின் ஸமஷ்டியான ஸத்வாம்சத்திலிருந்து மனதுமாக க்ரமமாக ஏற்படுகிறது.

அவ்விதமே பஞ்சபூதங்களுடைய வ்யஷ்டியான ராஜஸாம்சத்திலிருந்து வாக், பாணி, பாத, பாயு, உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்களும், ஸமஷ்டியான ராஜஸாம்சத்திலிருந்து ப்ராண தத்வமும் உண்டாகிறது. கேவலம் தமப்பிரதானமான ஐந்து மஹா பூதங்களையும ஒன்றொன்றையும் இரண்டு பாகமாகச் செய்து ஒவ்வொரு அர்த்தாம்சத்தை வைத்துக்கொண்டு மற்றொரு அர்த்தாம்சத்தை நான்கு பாகமாக பிரித்து தனது அம்சத்தை விட்டு பாக்கி நாலு அம்சங்களிலும் ஒவ்வொரு பாகமாக சேர்த்து கடைசியில் ஒன்றாக சேர்த்த ஐந்து பூதங்களுடைய சங்காதமே இந்த ஸ்தூல சரீரமாகும். இந்த தத்வத்தை விசாரித்தால் அநுப்ரவேச ரூபமான உன்னுடைய அநுக்ரமில்லாதபோனால் இந்த ஜீவனுக்கு ஸ்தூல சரீர ஸம்பத்தியோ லிங்க சரீரமென்ற ஸூக்ஷ்ம சரீர ஸம்பத்தியோ, சப்தஸ்பர்சம், ரூபரஸகந்தம் என்ற விஷய ஸம்பத்தியோ ஒன்றுமே ஏற்படாது.

உன்னுடைய அநுக்ரகத்தால்தான் ஸகலப்ராணிகளும் அந்தந்த இந்திரியங்களால் அந்தந்த விஷயங்களை அநுபவித்து கொண்டுவருகிறார்கள். மோக்ஷம் என்ற பரம புருஷார்த்தத்தையடைய ப்ராகிருதமான ஜனங்கள் உன்னை பஜிக்காதபோனாலும் தங்களுக்கு இஷ்டமான காமத்தையநுபவிப்பதற்காகவாவது உன்னை பஜித்தே தீரவேண்டும். உன் அநுக்ரகமில்லாமற்போனால் காம அநுபவமும் ஏற்படாது. அந்தந்த இந்திரியங்களில் அந்தந்த அதிஷ்டான தேவதாரூபமாக பரம்பொருளான வாசுதேவ பரப்ரம்மம் அநுப்ரவேசம்பண்ணாத போனால் எந்த இந்திரியம் எந்த விஷயத்தை க்ரகிக்கும்.

இவ்விதம் பரம்பொருளான வாசுதேவ பரப்ரம்மம் ப்ராணிகளுடைய போகஸம்பத்திக்குக்கூட காரணபூதமாக இருந்து வரும்பொழுது ஹே பரம்பெருளே! உன்னை எந்தப்ராணிகள்தான் அநுஸரிக்காமல் இருப்பார்கள். உன் பக்தர்களாக ஆகித்தான் ஆகவேண்டும். ப்ராணனை பஜித்துவருகிற ஜீவகோடிகள் உன் பக்தர்களாக இருந்தார்களேயானால் அவர்கள்தான் ஸபலமான ஜீவனத்தோடு கூடினவர்களாக ஆகிறார்கள். அவர்களுடைய ஜீவனம்தான் நல்ல ஜீவனமாக ஆகும். பாபகர்மாவினால் உன்னை பஜிக்காமல் இருந்தார்களேயானால் அவர்கள் துருத்திக்கு ஸமானமானவர்களே. அதிலும் காற்றோட்டமிருக்கிறது, இவர்களிடத்திலும் காற்றோட்டமிருந்து வருகிறது. அவர்தளுடைய ஜீவனம் பயனற்ற ஜீவனமாக ஆகும். தவிரவும், உன்னுடைய உதவியை கவனித்தால் எவ்விதமான மூடனும் உன்னை பஜித்தே தீரவேண்டும். அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம், என்று ஐந்து கோசங்கள் ப்ரஸித்தமானவை. இந்த ஐந்துகளும் கோசம்போல் ஒத்தவைகள், இதுகளில் அபிமானமுள்ள ஜீவனுக்கு ஹே பரம்பொருளே! உனது

ஸ்வரூபம் தெரிவது கஷ்டமாகும், உன் ஸ்வரூபத்தை இந்த ஐந்துகளும் ஜீவனுக்குத் தெரியாமல் மறைக்கின்றதுகளோ என்று தோன்றும். உண்மையில் மறைவல்ல இருளால் ஸூரியனுக்கு மறைவுண்டா? அதுபோல் உன்னிடத்தில் கல்பிதமான ஐந்து கோசங்களும் உன்னை எப்படி மறைக்கும். இந்த ஐந்து கோசங்கள் உன்னை மறைக்கிறது என்பதும் ப்ராந்திதான்.

ஆகையால் கோசம்போல் ஒத்தவைகள். பஞ்சபூதத்தின் விகாரமான ஸ்தூல சரீரமே அன்னமயகோசமாகும். ப்ராணபஞ்சகமும் கர்மேந்திரியபஞ்சகமும் ப்ராணமயகோசமாகும். மனதோடுகூடின ஞானேந்திரியபஞ்சகம் மனோமயகோசமாகும். புத்தியோடுகூடின ஞானேந்திரிய பஞ்சகம் விக்ஞானமயகோசமாகும். கர்த்தாவாயும் போக்தாவாயும் ப்ரகாசிக்கிற சிதாபாஸன் என்ற ஜீவனே ஆநந்தமய கோசமாகும். கண்ணாடியில் முகத்திற்கு ப்ரதிபிம்பம் ஏற்படுவது போல் கண்ணாடியைப்போலொத்த அந்தக்கரணமென்ற மனதில் வாசுதேவ பரப்ரம்மத்திற்குப்ரதிச்சாயை ஏற்படுகிறது. அந்தப்ரதிச்சாயைத்தான் அதாவது ப்ரம்மத்தின் ப்ரதிபிம்பத்தைத்தான் சிதாபாஸன் என்றும், ஜீவன் என்றும் கர்த்தாவென்றும் போக்தாவென்றும் ஆநந்தமயகோசம் என்றும் வேதாந்திகள் வ்யவகரிப்பார்கள். அன்னமயகோசம் என்றது தமோகுணத்தின் விகாரமாகும். ப்ராணமயகோசமோ ரஜோகுணமாகும். மனோமயகோசம் ரஜோகுணம் தமோகுணம் இரண்டுகளாலும் ஸம்பந்தப்பட்ட ஸத்வகுணமாகும். விக்ஞானமயகோசமோ ரஜோகுண தமோகுண ஸம்பந்தமில்லாததான சுத்த ஸத்வகுணமாகும். ஆநந்தமய கோசமோ ஸத்வகுணம் ரஜோகுணம் தமோகுணம் என்ற மூன்றுகளுக்குள் ஒரு குணத்திற்கும் க்ஷோபமில்லாமல் அந்த குணங்கள் ஸமமாக இருக்கும்பொழுது குண

ஸாம்யாவஸ்தையை அடைந்த அவித்யையில் ஸம்மந்தப்பட்ட சைதன்யமாகிய சிதாபாஸனே ஆகும். அவித்யோபஹிதமான சைதன்யமே ஆனந்தமயகோசமாகும். குணவைஷம்யமில்லாமல் இருக்கும் ஸமயத்தில் அவித்யையானது ஸ்படிகம்போல் அதிஸ்வச்ச மாக பாஸிக்குமானபடியால் அவித்யோபஹித சைதன்யம் என்ற ஆநந்தமயகோசத்தை வாசுதேவ பரப்ரம்மமாகிற ஜ்யோதிஸ்ஸுக்கு ஸ்படிகமயமான ஒரு கூடுபோல் சொல்லவேண்டியதாக ஆகிறது. அதற்கும் மேலாக விக்ஞானமயகோசமானது சுத்தஸத்வமயமான தினால் முத்துவெள்ளைக் கண்ணாடிமயமான கூடுபோலும், மனோமய கோசமானது மலின ஸத்வமயமானதினால் சாமான்யமான வெள்ளைக் கண்ணாடிமயமான கூடுபோலும், ப்ராணமயகோசமானது ராஜஸமான தினால் சிகப்புக்கண்ணாடி மயமான கூடுபோலும், அன்னமயகோச மானது தமோகுணமயமானதினால் ரொம்பவும் லேசான கருப்புக் காயிதத்தால் செய்யப்பட்ட கூடுபோலவும், வித்வான்களுடைய அநு பவத்தில் சொல்லவேண்டியதாக இருந்து வருகிறது.

ஒரு தீபஜ்யோதிஸ்ஸுக்குஸ்படிகத்தால் ஒரு கூடு, அதற்குமேல் நல்ல வெள்ளை கண்ணாடியால் ஒரு கூடு, அதற்குமேல் சாமான்ய வெள்ளை கண்ணாடியால் ஒரு கூடு, அதற்குமேல் சிகப்பு கண்ணாடி யால் ஒரு கூடு, அதற்குமேல் லேசான கலர் காயிதத்தால் ஒரு கூடு இருந்தால் எப்படி இருக்குமோ அதுபோல் ப்ரகிருதத்தில் ஐந்து கோசங்களால் ஆவ்ருதமாக வாசுதேவ பரப்ரம்மம் என்ற ஆத்ம ஜ்யோதிஸ் விளங்கிவருகிறது. ஒவ்வொரு கூடுகளிலும் ப்ரம்மப்ரகாச மானது வீசிக்கொண்டு அந்தந்தக் கூடுகளுடைய ஆகாரம் எப்படியோ அவ்விதமாகி விடுகிறது. அன்னமயகோசத்திலுள்ள ஒளியைக்காட்டி லும் ப்ராணமய கோசத்தின் ஒளி அதிகமாகும். அதைக்காட்டிலும்

மனோமய கோசத்தில் அதிகம். அதைக்காட்டிலும் விக்ஞானமய கோசத்தில் அதிகம். அதைக்காட்டிலும் ஆநந்தமய கோசத்திலதிகம். அது நியாயம்தானே. சைதன்யத்திற்கு ஸமீபத்தில் உள்ளதில் சைதன்யம் அதிகமாகத்தானே வீசும். ஆகிலும் அந்த சைதன்யம் என்ற ப்ரகாசமானது அன்னமயகோசத்தினுடையதாகவோ, ப்ராணமயகோசத்தினுடையதாகவோ, மனோமயகோசத்தினுடையதாகவோ, விக்ஞானமயகோசத்தினுடையதாகவோ, ஆநந்தமயகோசத்தினுடையதாகவோ ஆகாது.

இந்த ஐந்து கோசமும் எந்த வாஸுதேவ பரப்ரம்மத்தினிடத்தினிடத்தில் கல்ப்பிதமோ, இந்த ஐந்து கோசங்களுக்கும் எந்த வாசுதேவ பரப்ரம்மம் விலக்ஷணமான வஸ்துவோ, எந்த வாசுதேவ பரப்ரம்மமானது இந்த ஐந்து கோசங்களிலும் கண்ணாடியில் முகம் போல் ப்ரதிபிம்ப பாவேன அநுப்ரவேசம் பண்ணி அந்தந்த கோசம் போலொத்த ஆகாரத்தைத் தானும் அடைந்து அந்தந்த கோசங்களை சைதன்ய விசிஷ்டம்போலும், சேதனம்தான் இது, என்று வித்வான்களுக்கும் தோன்றக்கூடியதாகவும், செய்துவருகிறதோ அந்த வாஸுதேவ பரப்ரம்மத்தினுடையதாகத்தான் ஆகும். ஆனால் வாஸுதேவ பரப்ரம்மமானது அனாத்மாவான இந்த கோசங்களில் ஸம்மந்தப்பட்டு அந்தந்த ஆகாரத்தையடைவதினால் அந்த ப்ரம்மத்திற்கு ஏகரஸத்வம் போய்விடாதா என்று சங்கிக்கக்கூடும். அது சரியல்ல. ஏகரஸத்வம் போகவே போகாது. ஏனென்றால் அந்த வாசுதேவ பரப்ரம்மமானது அன்னமயம் முதலான ஐந்து கோசங்களுக்கும் பரம காரண வஸ்துவாக ஆகிறது. காரணத்திற்கோ காரியத்தில் அனுவ்ருத்தி லோகவேதஸித்தமானது. ம்ருத்தின் காரியமான கடசராவாதிகளில் ம்ருத்துக்கு அநுவிருத்தியானது லோக ப்ரஸித்தமல்லவா.

எந்த காரியத்தில் எது அநுவிருத்தித்துக் கொண்டிருக்கிறதோ அது தான் அதற்கு காரணமாக ஆகும்.

ஆகையால் இந்த வாஸுதேவ பரப்ரம்மமானது அன்னமயம் முதலான கோசங்களுக்குத்தான் காரணமாக இருக்கும் காரணத்தால் அந்த கோசங்களில் அநுவ்ருத்தியானது அந்த ப்ரம்மத்திற்கு இயற்கையாகவே ஏற்படுகிறதைக்கொண்டு அந்தந்த கோசத்தின் ஆகாரத்தைப் போலொத்த ஆகாரத்தை யடைகிறது என்று சொன்னதன்னியில், வாஸ்தவத்தில் கோசத்தின் ஆகாரபாவத்தை இந்த ப்ரம்மமானது அடைகிறது என்று சொல்வதில் தாத்பர்யமில்லை. அதனால் ஏகரஸத்வம் ப்ரம்மத்திற்கு போய்விடாது. அந்தந்த கோசத்தின் ஆகாரத்தை ப்ரம்மம் அடைந்திருப்பதால் ப்ரம்மத்திற்கு ஸத்யத்வமும் அஸங்கத்வமும் போய்விடுமோ என்ற பயமும் வேண்டாம் ஆகாரம் போலொத்த ஆகாரத்தை யடைகிறது என்று தானே சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும் ஐந்து கோசங்களையும் ச்ருதியானது உபதேசம் செய்துவிட்டு பிறகு ஒவ்வொன்றையும் இல்லை இல்லையென்று தள்ளியும் விட்டு கடைசியில் புச்சப்ரம்ம வாக்யத்தில் அன்னமயகோசம் முதல் ஆநந்தமயகோசம் உள்பட ஸகல த்வைத ப்ரபஞ்சத்திற்கும் அதிஷ்டானமாகவும், ஸ்வப்ரதானமாகவும், இந்த வாசுதேவ பரப்ரம்மமானது உபதேசிக்கப்படுகிறது. அதனால் அந்த வாசுதேவ பரப்ரம்மமானது இந்த்ரிய கோசரமாகும் காரணத்தால் ஸத் என்று சொல்லப்படும் அன்னமயகோசத்திற்கும், இந்த்ரிய கோசரமாகாத காரணத்தால் "அஸத்" என்று சொல்லப்படுகிற சூக்ஷ்மமான மற்ற கோசங்களுக்கும் வ்யதிரிக்தமான வஸ்து. அந்த ஐந்து கோசங்களுக்கும் சாக்ஷி சைதன்யமே வாசுதேவ பரப்ரம்மமாகும். அத்துடன் இந்த ஐந்து கோசங்களும் அதிஷ்டான சாக்ஷாத்

காரத்தால் அழியும்பொழுது, தான் அதிஷ்டானமான காரணத்தால் தான் அழியாமல் மிச்சமாக மீறுகிற பொருளாக ஆகிறது. அக்கார ணத்தாலேயே அது ஸத்யமாகும்.

இவ்விதம் அஸங்கமாயும், ஸத்யமாயும், ஸர்வசாக்ஷியாயும் இந்த வாசுதேவ பரப்ரம்மம் விளங்கிவரும்பொழுது அந்த பரப்ரம்மத் திற்கு அன்னமயம் முதலான கோசங்களில் அநுவ்ருத்தியைத்தான் எதற்காக சொல்லவேண்டும். அன்னமயாதிகளை ப்ரம்மம் என்று தான் எதற்காக உபதேசிக்கவேண்டும் என்று கேட்கக்கூடும். அது சரியே. ஆகிலும் ச்ருதியானது மாதாவின் ஸ்தானத்திலிருந்து கொண்டு குழந்தைகளான ஜீவர்களுக்கு ஸுலபமாக ப்ரம்ம தத்வத் தைப் போதிக்கவேணுமென்ற கருணையுடன் சாகாசந்த்ர ந்யாயத்தை அவலம்பித்து சுத்தமான சந்திரனை உபதேசிக்க முதலில் ஒரு மரத்தி னுடைய கிளையை சந்திரன் என்று காட்டுவதுபோல் பஞ்சகோச விலக்ஷணமான ப்ரம்ம தத்வத்தை உபதேசிக்க உண்மையில் அப்ரம்ம மாகிய அன்னமயாதி கோசங்களை ப்ரம்மம் என்று உபதேசித்தது. கருணாம்ருதத்தால் நிறைந்த ச்ருதிகளுக்கு இது அலங்காரமாகத் தான் ஆகும்.

ஆகையால் வாசுதேவ பரப்ரம்மத்தினுடைய ஸத்யத்வத் திற்கோ, அஸங்கத்வத்திற்கோ, சிதாகாரத்வத்திற்கோ, யாதொரு விதமான வ்யாஹதியேயில்லை. வாசுதேவ பரப்ரம்மமானது சித்ரூபம், ஸத்ரூபம், ஆநந்தரூபம், கூடஸ்தம், அஸங்கம், நித்ய சுத்த புத்த முக்த ஸ்வபாவம், ப்ரக்ஞானகனம் என்றே ஸித்தமாகும்.

இவ்விதம் மகிமை தங்கிய ஹே வாசுதேவ பரப்ரம்மமே! ஸகல ப்ராணிகளுக்கும் பரமோபகாரத்தைச் செய்ய முன்வந்த கடவு

ளல்லவா நீ! உன்னுடைய அநுக்ரகமில்லாமற் போனல் எந்த காரி யத்தை எந்த ப்ராணி செய்யமுடியும். நீ யல்லவா சங்காதத்தில் ஆங்காங்கு அநுப்ரவேசித்து அசேதனத்தையும் சேதனம்போல் செய்து அந்தந்த அசேதனங்களும் ஒவ்வொரு காரியத்தைச் செய்ய சாமர்த்தியமுள்ளவைகளாக செய்துவைக்கிற ப்ரபு. இவ்விதமிருக்கும் பொழுது உன்னை ப்ராணிகள் அனவரதம் பஜிக்க வேண்டாமா. முன் ச்லோகத்தில் சொல்லியபடி இரண்டு ப்ரகாரமான உபாஸனங் களுக்குள் ஏதாவது ஒரு ப்ரகாரத்தை அவலம்பித்து உன்னை உபா ஸிக்கிறவர்களே புண்யவான்கள், தன்யர்கள், ஜன்ம சாபல்யத்தை யடைந்தவர்கள். அப்படிப் பஜிக்காதவர்கள் க்ருதக்னர்கள், பாபிகள், மூர்க்கர்களுடைய கோடியில் சேர்க்கத் தகுந்தவர்கள். உன்னுடைய பஜனத்தின் மகிமையை நான் என்னவென்று சொல்வேன். உன் பக்திதான் ஞான வைராக்ய த்வார மோக்ஷத்திற்கு அந்தரங்க சாதன மாகும்.

ஆகையால் துர்லபமான மானிட ஜன்மாவை யடைந்த ப்ராணி கள் உன்னுடைய பஜனத்தில் ஈடுபட்டு ஜன்ம சாபல்யத்தை யடை கிறதே அவச்ய கர்த்தவ்யமான காரியங்களுக்குள் ஒரு முக்யமான காரியமாகும் என்று ஈசாவாஸ்ய உபநிஷத்தும் கேனேபநிஷத்தும் ஒன்றுசேர்ந்துகொண்டு வாசுதேவ பாப்ரம்மத்தை மேல்கண்ட ச்லோகத்தால் ஸ்தோத்ரம் செய்கிறது. ஆகையால் பகவத் பஜனம் தான் ச்ரேயஸ்ஸை அடைவதற்கு முக்ய சாதனமாகும் என்பது திண்ணம்.

(தொடரும்)

## Manians Best Kalnar Tooth Powder.

### கல்நார் தந்த சுத்தி சூர்ணம்.

இந்த சூர்ணமானது வைத்திய சாஸ்திரப் பிரகாரம் அநேக மூலிகைகளாலும், வேர்வைகளாலும், நாநாவித பட்டைகளாலும், இன்னும் பற்களுக்கு உருதிகொடுக்கும்படியான சிலகல்நார் வகையருவினாலும் செய்யப்பட்டுள்ளது இதை உபயோகித்து வந்தால், பல்வலி, பல்ஊரல், பல்லரணை, பல் அசைவு, பல்கூச்சம், முதலிய பற்களைச்சேர்ந்த வியாதிகளையும் கண்டிக்கும், பல்வலி, உடனே நிற்கும்.

**R. S. Manian,**

பாக்கட் 1-க்கு 0—1—6

Ammangudi,
Jeeyapuram, S. I. Ry.

ஸன்மார்க்க ப்ரதர்சனீயை

ஆதரியுங்கள்.

Regd. No. M2970 Regd. No. M2970

# “ஸன்மார்க்க ப்ரதர்சினீ”

## மதுரை.

ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியில் வெளிவரும்.

| | மதுரைக்கு | வெளியூர்களுக்கு |
|---|---|---|
| வருஷ சந்தா ரூ. | 1—0—0 | 1—6—0 |
| 6 மாத சந்தா ரூ | 0–12—0 | 0–14—0 |
| தனிப்பிரதி ரூ | 0—2—0 | |

1. சந்தாத்துகையை முன் பணமாகவே மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும்.
2 விலாஸ மாறுதல்களுக்கு சந்தா எண்ணைக் குறித்து புதிய விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. கடிதப் போக்கு வரத்துக்களுக்கு, பதில் வேண்டுவோர், தபால் செலவு அனுப்ப வேண்டும்.

## ஓர் முக்கிய அறிவிப்பு.

‘ஸன்மார்க்கப்ரதர்சினீ’ வாசகர்களுக்கு வணக்கமாகத் தெறிவித்துக் கொள்வதாவது:—

சில அசௌகர்யக் குறைவினால் அச்சுயந்திரசாலையானது மாற்றப்பட்டதின் நிமித்தமாக, அந்த யந்திரசாலையில் நாகரடைப் இல்லாததைக் கொண்டு கிரந்தாக்ஷரத்தில் ச்லோகங்கள் அச்சிட்டிருப்பதை வாசகர்கள் மன்னிக்குமாறு கோறப்படுகிறது.

நாளது மார்ச்மீ 1-ம் தேதி வெளிவரும் ஸஞ்சிகையில் நாகாடைப்பிலேயே முன் நடந்தது போல ச்லோகங்களை வாசகர்கள் வாசித்து ஸந்தோஷப் படும்படி ஸௌகர்யம் நேரிடுமென்பது திண்ணம்.

மானேஜர்,
ஸன்மார்க்க ப்ரதர்சினீ,
மதுரை.

ஹரிஸமய திவாகரம் பிரஸ், மதுரை—35.